# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 25 புதன்கிழமை (07-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:72


✪ சுயநிர்ணய உரிமை ✪ தாயகக் கோட்பாடு ✪ இனத்துவ அடையாளம்

# 3 அடிப்படை அம்சங்களின் கீழ் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும்!

## பாலசிங்கம் கூறுகிறார்



லண்டன்,பெப்ரவரி7

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஸ்ரீலங்கா அரசுடன் நடத்தப்படும் பேச்சுக்கள் தமிழரின் சுயநிர்ணய உரிமை, தாயகக் கோட்பாடு, இனத்துவ அடையாளம் ஆகிய மூன்று முக்கிய அடிப்படைகளின் கீழேயே ஆரம்பிக்கப்படவேண்டும்.

இவ்வாறு கூறியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

லண்டனில் செய்தி ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே பாலசிங்கம் இப்படித் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பான சூழல் உருவாகி இருப்பது தொடர்பாகக் கேட்கப்பட்டபோதே அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. அப்பேட்டியின் முழு வவரங்களும் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை-

சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கவிருந்ததாகவும் -

அதன் பின்னர் அவர் கொழும்பு செல்லவுள்ளார் என்றும் - புலிகளின் தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ.3)

## பிரிட்டிஷ் தூதர் கிழக்குக்கு விஜயம்

மட்டக்களப்பு,பெப்.7

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதர் லிண்டா ஜோய் டபீல்ட் இன்று முதல் ஐந்து தினங்கள் கிழக்குப் பகுதியில் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

தமது தூதரக பாதுகாப்புத் துறை செயலாளருடன் செல்லும் அவர் கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராயவிருக்கிறார்.

அங்குள்ள மதகுருமார்களையும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் அவர் சந்திப்பார். (ஐ-3)

## யாழ்.ஆயர் வன்னி சென்றார்

வவுனியா,பெப்.7

ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்.ஆயர் அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம், மன்னார் ஆயர் இராயப்பு யோசப் சகிதம் நேற்று மாலை ஐந்து மணியளவில் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

"சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆற்றிய உரை சமாதானம் தொடர்பான சாதகமான சூழலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது" என்று யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் வன்னி புறப்படுவதற்கு முன்னர் மன்னாரில் வைத்து செய்தியாளர் ஒருவரிடம் தெரிவித்தார். (ஐ-7-164)

## புலிகளுடன் பேசுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன!

### வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,பெப்.7

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான முயற்சிகளை அரசு மேற்கொண்டுவருகின்றது என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளிவிவகார அமைச்சு விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நோர்வேயின் விசேட தூதர் எரிக சொல்ஹெய்ம் கொழும்பில் நடத்திய பேச்சுக்கள் குறித்து அந்த அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. நோர்வேயின் பங்களிப்புடன் அந்த முயற்சி தொடரும்.

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டாலும எக்காரணம் கொண்டும் யுத்தம் நிறுத தப்படமாட்டாது. யுத்தத்தை நிறுத்துமாறு விடுவிக்கப்படும் சர்வதேச அழுத்தங்களையும் அரசு ஏற்கப்போவதில்லை - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-7)

## அரசமைப்புத் திட்ட நகலை புலிகளுக்கு அனுப்ப முயற்சியாம்

கொழும்பு,பெப்.7

கடந்த ஓகஸ்டில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகலின் பிரதி ஒன்றை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மேற்கொண்டுவரும் முயற்சிகளின் பிரதிபலனாக இரு தரப்பினரிடையேயும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை உருவாகி இருப்பதை அடுத்தே அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகலின் ஆங்கிலப் பிரதி ஒன்றை புலிகளுக்கு அனுப்ப அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

சட்ட நகலின் பிரதியை புலிகளின் பிரமுகர் ஒருவரிடம் கையளிப்பதற்காக விசேட பிரதிநிதி ஒருவரை அரசு நியமித்துள்ளதாகவும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-20)

## ஸ்ரீலங்கா அரசுக்கு ஜப்பான் அழுத்தம் கொடுக்கவேண்டும்

### தமிழ்க் கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு,பெப்.7

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்துக்குப் பதிலாக அரசாங்கமும் யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளவும்-

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை ஆரம்பித்து இரு தரப்புக்களுக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கையை வளர்க்கவும் - ஜப்பான் அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு மேற்கண்டவாறு இலங்கைக்கான ஜப்பான் தூதர் ஒட்சிகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் சுதந்திர தின உரை குறித்து புலிகள் தரப்பு அதிருப்தி

லண்டன்,பெப்.7

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் சுதந்திரதின உரை, சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான கொழும்பு அரசாங்கத்தின் கடும்போக்கை ஊர்ஜிதம் செய்யும் விதத்தில் அமைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சமாதான முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான இலக்கு நோக்கிய முன்னேற்றத்துக்கான சமிக்ஞை எதனையும் ஜனாதிபதியின் பேச்சில் காணமுடியவில்லை என்றும் அந்த வட்டாரங்கள அதிருப்தி தெரிவித்தன.

ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்த சில கருத்துக்களை எடுத்துக்காட்டி, விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்ததாக 'தமிழ் நெற்' தகவல் வெளியிட்டுள்ளது.

தமது அமைப்பிற்குக் களங்கம் உண்டாக்கும் விதத்தில் சுதந்திர தின உரை அமைந்திருந்ததாகவும் -

விடுதலைப் புலிகள் பலவீனமடைந்துவிட்டதான தவறான ஊகத்தை அரசு கொண்டிருப்பதாகவும் -

அந்த ஊகத்தின் அடிப்படையில் இராணுத் தீர்வு காண்பதனை ஊக்குவிப்பதாகவும் யுத்தத்தைத் தீவிரப்படுத்த அரசு முனைப்புக் கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதியின் பேச்சு உள்ளதென விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் மேலும் கருத்துத் தெரிவித்தன.

அந்த வட்டாரங்கள் ஜனாதிபதியின் உரையில் தொட்டுக்காட்டிய பகுதிகளில் பின்வருவனவும் அடங்கும்:-

"தமிழ் மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் தொடர்பில் எமது அரசாங்கம் பின்பற்றும் சரியானதும், நியாயபூர்வமானதுமான கொள்கை சர்வதேச அரங்கில் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

"தமிழ் மக்களுக்கு எதிராகவன்றி, பயங்கரவாதிகளாக இனங்காணப்பட்ட சிறுபிரிவினருக்கு எதிராகவே

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாத்தளையில் 5 தமிழர்கள் கைது

கொழும்பு,பெப்.7

மாத்தளை நகரப்பகுதி நேற்று நண்பகல் படையினரால் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்த சோதனையின் போது பொலீஸ் பதிவுச் சான்றிதழ் இன்றி வசித்து வந்ததாகக் கூறப்படும் 5 தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கெனத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் அனைவரும் வவுனியா, கெக்கிராவைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

### களுவாஞ்சிக்குடியில்

## தமிழ்ப்பெண் மீது பாலியல் வல்லுறவு; அதிரடிப்படைச் சிப்பாய் கைதானார்!

மட்டக்களப்பு,பெப்.7

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடியில் கடந்த ஞாயிறன்று இரண்டு பிள்ளைகளின் தாயான தமிழ்ப் பெண் ஒருவரைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியாகக் கூறப்படும் விசேட அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப சிப்பாய் வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த சமயம் தனிமையில் சென்ற இப்பெண்ணைக் கடத்திச் சென்று பற்றைக்குள் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து விசாரணை நடத்திய களுவாஞ்சிக்குடிப் பொலீஸார் செட்டிபாளையம் முகாமைச் சேர்ந்த பிரஸ்தாப சிப்பாயைக் கைது செய்து நேற்று மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஆப்துல் காதர் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

அவரை இருவார கலத்துக்கு விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

பிரஸ்தாப பெண் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-3-21)

## ரூ.5 ஆயிரம் சம்பள உயர்வு கோரி ஜனாதிபதிக்கு மகஜர் கையளிப்பு!

கொழும்பு,பெப்.7

வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க அரச ஊழியர்களுக்கு ஐயாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பத்து லட்சம் பேர் கையொப்பம் இட்ட மகஜர் ஜனாதிபதியிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

ஜே.வி.பி. அமைப்பினால் கடந்த ஜூன் மாதம் முதல் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்து வேட்டையின் பின் இந்த மகஜர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து மகஜரைக் கையளித்தனர்.

"பொருள்களின் விலையேற்றம், யுத்தம் போன்ற காரணங்களால் மக்கள் தமது வாழ்க்கையை நடத்த

(14ஆம் பக்கம் பார்க்க)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY



BIRTHDAY

## செல்வன் சந்துதன்

யாழ். புதிய உயர் கல்லூரியின் அதிபர் **சண்முகநாதன் அருள்நங்கை** தம்பதிகளின் செல்வப் புதல்வன் சந்துதன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (07-02-2001) புதன்கிழமை ஆனைக்கோட்டையில் உள்ள தனது இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். அவரை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

*புதிய உயர் கல்லூரி*
*யாழ்ப்பாணம்.*

வாழ்த்துபவர்கள்
**மாணவர்கள்**
முதற் கலை தேர்வு (வெளிவாரி) 2001
பேராதனைப் பல்கலைக்கழகம்

(C/15179)



SARUJAN

KOKUVIL JUNCTION

**COMPUTER PRINT**
உங்கள் சகல அச்சுத்தேவைகளுக்கும்.

**COMMUNICATION, FAX**
வெளிநாட்டு உள்நாட்டு தொலை அழைப்புகளுக்கு

**LAMINATING (COVER) PAPER**
மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்

**PHOTO COPY, BOOK BINDING, COMPUTER ACCESSORIES**
அனைத்தையும் ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக்கொள்ளலாம்

**TEL: 021-2961**
*K.K.S. ROAD, KOKUVIL*

(83823)



# நன்றி நவில்லல்

## அமரர் K.C.அப்புத்துரை

25.01.2001 வியாழனன்று பறாளை முருகனுடன் இணைந்த எமது வழிகாட்டி அமரர் K.C.அப்புத்துரை அவர்களின் பூவுலக மறைவை அறிந்து நேரிலும், தபால், தந்தி, தொலைபேசி, பத்திரிகை, e-mail போன்ற தொடர்பு சாதனங்களூடாகத் தங்கள் அனுதாபத்தை அறியத்தந்து எமக்கு சகல விதத்திலும் ஆறுதலளித்த யாவருக்கும் எமது உளமார்ந்த நன்றியை இத்தால் வெளிப்படுத்துகின்றோம்.

மேலும் அன்னாரின் இறுதிக் கிரியைகளை நடத்த உதவிய ஆகம, சமூக, அரச நிறுவனங்களுக்கும் அவற்றின் நிர்வாகிகளுக்கும், குறிப்பாக அமரர் அப்புத்துரையினதும் அவரைச் சார்ந்தவர்களதும் விருப்பத்துக்கிணங்க சுழிபுரத்தின் பாரம்பரிய மயானமான "திருவடிநிலை" நிலையத்தில் இறுதிக் கிரியைகள் ஆற்ற உதவிய வலி.மேற்குப் பிரதேசசபைத் தலைவருக்கும் மேற்படி நிலையத்தின் இராணுவப் பொறுப்பாளர்களுக்கும் எமது உளமார்ந்த கடமைப்பாட்டினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*"மறு இல்லம்"*
*சுழிபுரம்.* (C/15191)

**அன்பின் அடிப்படையில்**
**அன்னாரின் குடும்பத்தினர்.**



# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
02
-
12
-
1936



உதிர்வு
22
-
01
-
1997

## அமரர் செல்லர் ஆறுமுகதாஸ்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

உங்கள் ஆத்மா சாந்திபெற இணுவை
விநாயகரை வேண்டுகிறோம்

*"திருக்கேதீஸ்வரி இல்லம்"*
*இணுவில் தெற்கு, இணுவில்.* (83828)

**- மனைவி, மக்கள்.**


## பிரிட்டனுக்கு மகஜர்

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் சந்தர்ப்பத்தைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கைகள எதனையும் மேற்கொள்ளவேண்டாம்.

இவ்வாறு கோரிக்கை விடுத்து மகஜர் ஒன்றை திருகோணமலையின முக்கிய பிரஜைகள் 100பேர் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் உட்பட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், டாக்டர்கள் மற்றும் தொழிற்சங்களின் பிரதிநிதிகள் அடங்கிய 100 முன்னணிப் பிரஜைகள் இம்மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர். (ஐ-க)

## விளையாட்டு அரங்கு திறப்பு

சாவகச்சேரி.பெப்.7

சமரபாகு நியூட்டன் சனசமூக நிலையத்தில் சுமார் 25 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட விளையாட்டரங்கத்தின் திறப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-31)

## மேலும் மூன்று மாணவர்கள் காயம்

பாடசாலைகளில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளின்போது காயமடைந்த மேலும் மூன்று மாணவர்கள் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

- ஆரோக்கியநாதன் கமல்ராஜ் தரம் - 10, யாழ்.இந்துக்கல்லூரி.
- வடிவேல் பிரசாத் - தரம் - 9, கொக்குவில் இந்துக்கல்லூரி.
- மாசிலாமணி அனுசியா - தரம் - 5, சுதுமலை சிம்மிய பாரதி வித்தியாலயம். (ஐ-6)

## கைதான மூவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.7

வெளிமாவட்டம் செல்ல ரிக்கற் பெறச் சென்ற சமயம் யாழ்ப்பாணம், மணியம் கட்டடப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் விசாரணைகளின் பின்பு விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட அச்செழு, நீர்வேலியைச் சேர்ந்தவர்களான பொன்னுத்துரை சசிகுமார் (வயது22), ஜீவராசா ரஜிகரன் (வயது 21) ஆகியோர் கடந்த 3 ஆம் திகதியும் -

அதே இடத்தைச் சேர்ந்த நன்னித்தம்பி ஸ்ரீரங்கன் (வயது 21) என்பவர் கடந்த 5 ஆம் திகதியும் -

கிராம அலுவலர் முன்பு விடுதலை செய்யப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6-10-15-ரி-6)


SHAMROCK
**கணக்கீடு**

**- A/L 2002 -**
உற்பத்திக் க/கு

**ஆரம்பம்: 08.02.2001**
Tue., Thus., 4-5pm

2003 ஆரம்பமாகியுள்ளது.

**Mr.தவா**
B.Com (Hons) (Acc Spl)

(83837)



# அறிஞர் ஐயண்ணா சனசமூக நிலையம்

## சுன்னாகம் மேற்கு

மேற்படி சனசமூக நிலையத்தின் நூலக வளர்ச்சிக்காக சுன்னாகம் நாகம்ஸ் திரையரங்கில் இன்று (07.02.2001) நடைபெற இருந்த திரைப்படக் காட்சி, அதேதினம் ராஜா திரையரங்கில் "மனம் நலம் மங்கியவர்களின் மறுவாழ்விற்காக" மருத்துவ மாணவர்களால் காண்பிக்கப்படும் நிதி உதவிப் படக்காட்சி இடம்பெறுவதால் அவர்களுக்கு அனுசரணை வழங்கும் முகமாக எதிர்வரும் 09.03.2001 வெள்ளிக்கிழமை பிற்போடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(83827)

*- நிர்வாகம்.*



# நெஞ்சினை நெகிழவைக்கும் 6ஆம் ஆண்டு நினைவுத்துளிகள்

எங்கள் இதயங்களில்
05
-
04
-
1926



இறைவன் பாதங்களில்
15
-
01
-
1995

## அமரர் ஏரம்பு சோதிலிங்கம்

**திதி-07.02.2001**

பார்தனில் மேன்மையுற்று வாழவைத்த வள்ளலே!
புகழ் பூத்த சோதி என்ற எழில் நாமத்தினை
தெரியாதோர் இங்கு இலர். தீவகத்தின்
சிரசாம் மண்டையூரின் முடிசூடா
மன்னனே! உங்கள் புகழ் என்றும்
நிலைத்திடும். காலங்கள் மாறலாம்
எம் நெஞ்சங்களில் ஆறு ஆண்டென்ன
அறுநூறாயிடினும் உங்கள்
நினைவு மறக்குமா? சீர்பெற வைத்த
எம் குலவிளக்கே உங்களை
மனதாரப் போற்றி அஞ்சலி செய்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*புகையிரத வீதி.*
*கொக்குவில்.*

தங்கள் நினைவில் வாடிடும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதர,
சகோதரி, மைத்துனர்,
பேரப்பிள்ளைகள்.

(83858)



# UNIVAC நிறுவனத்தின் புதிய கிளை ஆரம்பம்

அச்சுவேலி பிரதேசத்தில் நவீன கணனித்
தொழில்நுட்பத்தினை வழங்கும் நோக்கில் எமது கிளை
ஒன்றினை அச்சுவேலியில் ஆரம்பித்துள்ளோம்.
இக்கிளை நிறுவனத்தில்
இன்று 07.02.01 முதல் 12.02.01 வரையில்
இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு 50% சலுகைக்
கட்டணத்தில் கணனிப் பயிற்சி
வழங்கப்படவுள்ளது.

## UNIVAC

**College of Computer Information Technology**
(British ACP Recognized Computer Training Centre)

Director
Univac.

(83836)

C/o Rev.P.Thevarajah
C.S.I Church,
Atchuvely.



# புதுக்கடைத் திறப்பு விழா



நிகழும் விக்கிரம வருடம் தைத்திங்கள்
25ஆம் நாள் இன்று (07.02.2001) புதன்கிழமை
நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

## ஜொலி ரெஸ்ரோறன்ற்

**பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,**
**திருநெல்வேலி.**

B.I. .மகேசனின் கைப்பக்குவத்தில்
(B) புரியாணி (F) பிறைட்றைஸ், நூடில்ஸ், சகல சூப் வகைகளும் மற்றும்
உள்நாட்டு - வெளிநாட்டு உணவு வகைகளை உடனுக்குடன் ஓடர் செய்து சுடச்சுட
சுத்தமாகத் தயார் செய்து கொடுக்கும் ஒரே இடம் என்றும் உங்கள் மனம் விரும்பும்

## ஜொலி ரெஸ்ரோறன்ற்

(83821)

உரிமையாளர்
**V.பஞ்சநாதன்** (பஞ்சு)

# உதயன்

## அக்கறையில் சந்தேகம்

ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்தாறாம் ஆண்டில், எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா தலைமையிலான அரசாங்கம் சிங்களத்தை மட்டுமே உத்தியோக மொழியாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த போது —

பெரும் இடதுசாரித் தலைவராக அப்போது விளங்கிய டாக்டர் கொல்வின் ஆர். டி.சில்வா, எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து அந்தச் சட்டத்தை எதிர்த்தார். இரண்டு மொழிகளுக்கு இடம் கொடுத்தால் இலங்கை ஒரே நாடாக இருக்கும். ஒரு மொழியை மட்டுமே அரியாசனத்தில் ஏற்றினால் இந்த நாடு பிளவுண்டு இரண்டாகும் என்று எச்சரித்தார்.

அதே சமதர்மவாதியே, அரசமைப்பு அமைச்சராகி 1972 ஆம் ஆண்டின் புதிய அரசமைப்புச் சட்டத்தை இயற்றிய போது தாம் முன்னர் கூறிய இரண்டு மொழிகளான சிங்களத்துக்கும் தமிழுக்கும் அரியணையில் சம அந்தஸ்துக் கொடுக்க நினைத்தும் பார்த்ததில்லை. அது நிற்க.

இலங்கை மக்கள் இரண்டு மொழிகளைக் கற்றால் — தேசிய மொழிகளான சிங்களத்தையும் தமிழையும் கற்றால் — இன உறவுகளையும் பரஸ்பரம் புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் வளர்க்க முடியும் என்று 1956 இன் பல வருடங்களின் பின்னர் தெற்கின் அரசியல்வாதிகள் பெரும் ''கண்டுபிடிப்பைச்'' செய்தனர்!

அதன் விளைவாக வகுக்கப்பட்ட இரண்டு மொழிகளையும் மாணவருக்குக் கற்பித்தல் என்ற திட்டம் வெறும் திட்டமாகவே இருந்தது, செயற்பாட்டில் வெற்றி காணவில்லை.

அரசாங்க உத்தியோகத்தர்களை இரண்டு மொழிகளையும் பயிலச் செய்யும் முயற்சியில் அரசாங்கங்கள் அவ்வப்போது ஈடுபட்டு வருகின்றன. அந்த வரிசையில் அரச ஊழியர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி அடைவதற்கு ஊக்கம் அளிக்கும் திட்டம் ஒன்றை இந்த அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

தமிழும், உத்தியோக மொழியாக்கப்பட்டு சுமார் பதினான்கு வருடங்களாகின்றன. ஆயினும் தெற்கிலிருந்து அங்குள்ள அரசாங்கத் திணைக்களங்களில் இருந்து தமிழர்களுக்கு, தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தனிச் சிங்களத்திலேயே உள்ளன.

அரச திணைக்களங்கள் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு தனிச் சிங்களத்தில் கடிதங்களை அனுப்புவது தேசிய நல்லிணக்கம் என்ற சொல்லையே அவமதிப்பதாகும்.

அரச உத்தியோகத்தர்கள் இரண்டு மொழிகளைப் பயில வேண்டும் என்பதில் சிங்கள ஊழியர்கள் பெரும் அக்கறை காட்டுவதாக இல்லை. ஊக்குவிப்புத் திட்டமாக அன்றி கட்டாயமாகக் கொண்டு வந்தாலும் அவர்கள் தமிழையும் பயில்வார்களா என்ற கேள்வி உள்ளது.

அதேவேளை, இரண்டு மொழிகளைப் பயின்ற தமிழ் அரச பணியாளர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என்று செய்திகள் வெளிவந்துள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாக அவர்கள் அத்தாட்சிப் பத்திரங்கள் அனுப்பியும் ஊக்குவிப்புப் படி இன்னும் இல்லை.

இத்தகைய தாமதங்கள், தட்டிக்கழிப்புகள் இருமொழி அறிவைப் பரப்புவதில் அரசுக்கு உண்மையான அக்கறை உண்டா என்ற சந்தேகத்தையே நிலையாக்கும்.

# யாழ். கல்வியியல் கல்லூரிக்கு 120 மாணவர்கள் அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரியில் புதிய கல்வி ஆண்டுக்கு 120 மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர்.

ஆரம்பக் கல்வி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் நடனம், சித்திரம், சங்கீதம் ஆகிய கற்கை நெறிகளுக்கே மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர்.

மேற்படி கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர், பாதுகாவலர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாயில் உள்ள யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் —

அன்றைய தினம் அழைக்கப்பட்ட சகலரும் தவறாது சமுகளிக்க வேண்டுமெனவும் —

பீடாதிபதி தி. கமலநாதன் கேட்டுள்ளார்.

ஆரம்பக் கல்வி, சங்கீதம் ஆகிய கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரம் இன்று பிரசுரமாகின்றது. ஏனைய கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரம் நாளைய 'உதயனில்' வெளிவரும்.

### ஆரம்பக் கல்வி

எஸ். சிவராஜ் (சுழிபுரம்), ரி. மயூரா (கீரிமலை), பி. ஜனகேஸ்வரி (மிருசுவில் வடக்கு), எஸ். சுபாநந்தினி (யாழ்ப்பாணம்), வி. கேதீஸ்வரி (வட்டு. தெற்கு), ஜி. எவ். துஷ்யந்தி (நவாலி தெற்கு).

என். எஸ். கௌசினி (சங்கானை), எஸ். சிவதாரணி (மாகியப்பிட்டி), எஸ். தனவந்தி (தம்பாலை), எஸ். ஸ்ரீலட்சுமி (சுழிபுரம் மேற்கு), எம். நந்தினி (மட்டுவில் தெற்கு), எம். சசிகலா (மட்டுவில் தெற்கு).

எஸ். அகிழனி (கொக்குவில்), வி. விஜயமலர் (அராலி தெற்கு), கே. நாகேஸ்வரி (அராலி தெற்கு), ஏ. பிருந்தாபன் (தாவடி தெற்கு), வி. பசிக்குமார் (சுன்னாகம் தெற்கு), என். பாரதி (காரைநகர்).

எஸ். பி. சிவகரன் (உடுவில் தெற்கு), வி பி. சசிக்குமார் (நீர்வேலி தெற்கு), ஏ. டெய்ஸி (நவாலி தெற்கு), எஸ். செல்வகுமாரன் (மீசாலை வடக்கு), ரி. தேவமோகன் (பெரியவிளான்), கே. துஷ்யந்தன் (தனங்களப்பு), ரி. கலைராசன் (சித்தன்கேணி தெற்கு).

எஸ். யோகரஞ்ணம் (நாவற்காடு), கே. நந்தகுமார் (கரம்பைக் குறிச்சி), எஸ். நவகாந்தன் (திருநெல்வேலி), எஸ். சசீந்திரன் (அளவெட்டி), எஸ். சுரேஷ்குமார் (சண்டிலிப்பாய்).

### சங்கீதம்

ஆர். ரஜித்தா (சங்கானை), ரி. சுசித்தா (நாவற்காடு), எஸ். பிறீமா (குடமியன்), எஸ் கலையரசி (குடமியன்), எஸ். சிவாஜினி (நெடுங்கேணி), ஏ. தனுஜா (கல்லடி மட்டக்களப்பு), ஜி. ரி. ஜே. நிரோஜ் (கல்லாறு), பி ஆரபி (உடுப்பிட்டி), ஆர். விஜயலட்சுமி (கிளிநொச்சி), ஈ. மக்னற் (வவுனிக்குளம்).

(ஐ-7-73)

## லண்டன் விபத்தில் பண்டத்தரிப்பு இளைஞர் பலி

சண்டிலிப்பாய், பெப். 7

லண்டன் மாநகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் பண்டத்தரிப்பு காலையடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பலியானார்.

கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் பண்டத்தரிப்பு காலையடி தெற்கைச் சேர்ந்த சரசகோபால் சுரேஷ்குமார் (25 வயது) என்பவரே உயிரிழந்தார்.

நான்கு நண்பர்களுடன் காரில் பிரயாணம் செய்து கொண்டிருந்த வேளையில் எதிராக வந்த கனரக வாகனத்துடன் மோதியதில் இந்த இளைஞர் உயிரிழந்தார் என்றும் ஏனைய இளைஞர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க-135)

## சீனி விநியோகம்

அரியாலை, பெப். 7

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் பாவனையாளர்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் ஐந்து கிலோவுக்கு மேற்படாது சீனியை வழங்கி வருகின்றது.

கிலோ 42 ரூபாவாக சங்கத்தின் கிளைகளில் சீனியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-17)

## நாளை

தை 26

வியாழக்கிழமை

திதி: பூரணை பிற்பகல் 1.38 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம் முன்இரவு 8.43 வரை.

சுபநேரம்: 8.05 — 9.35

ராகுகாலம்: 2.05—3.35

(பகலுக்கும் இரவுக்கும்)

பழைய நேரப்படி

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 7

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் புதிய நூற்றாண்டின் முதலாவது பரிசளிப்பும், கணிப்பீட்டு அறிக்கை வழங்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் 4 மணிக்கு நிறுவன மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க. தேவராசா கலந்து கொள்வார்.

(ஐ-3)

## இலவச ஆங்கிலப் பயிற்சிநெறி

காரைநகர், பெப் 7

தேசிய இளைஞர் சேவை மன்றம் ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஊடாக இப் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு இலவச ஆங்கில மொழிப் பயிற்சி நெறியை நடத்த உள்ளது.

15 முதல் 29 வயதிற்கு உட்பட்ட 50 இளைஞர், யுவதிகள் இப் பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளதாகவும் ஆர்வமுடையோர் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து தலைவர், இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளனம், பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இளைஞர்கழக பிரதேச சம்மேளன தலைவர் ஞா. செந்தமிழ்ச்செல்வன் கேட்டுள்ளார்.

(ம-73)

## மெய்வல்லுநர் போட்டி

வலிகாமம், தெற்கு, பெப். 7

இணுவில் மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் இ. துரை எங்கரசு தலைமையில் நடைபெற உள்ளது.

ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் க. வேலும் மயிலும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ம-152)

### உதயவாக்கு

வெற்றியின் இரகசியம் எடுத்த காரியத்தில் நிலையாக நிற்றல்.

## தைப்பூச திருநாள்

வடமராட்சி, பெப். 7

தைப்பூசத் திருநாள் இன்று புதன்கிழமை யாழ். குடாநாட்டில் உள்ள ஆலயங் ளில் பூசை வழிபாடுகளுடன் இடம்பெறவுள்ளது.

முருகன், அம்மன் ஆலயங்களில் அதிவிசேடமாக இத் திருநாளை ஒட்டி பூஜைகள், வழிபாடுகள், மகேஸ்வரபூசை என்பன இடம் பெறுகின்றன.

புதிய தொழில்களை ஆரம்பித்தல், கட்டடங்களை அமைத்தல், குழந்தைகளுக்கு காது குத்தல், புதுமனை புகுதல் போன்ற நற்கருமங்கள் ஆற்றக் கூடிய திருநாள் இதுவாகும்.

* * *

கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு ருத்திராபிஷேகம், ஸ்நபனாபிஷேகம், பூச உற்சவம், வீதியுலா என்பன இடம்பெற உள்ளன.

* * *

யாழ். கோட்டை ஸ்ரீ முனிஸ்வரன் ஆலயத்தின் தைப்பூசத் திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் நடைபெறும்.

நண்பகல் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

(ஐ-6-10-17-173)

* * *

வடமராட்சிப் பகுதியில் தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோயில், நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில், கரவெட்டி அந்திரான் முருகன் கோயில், தென்புலோலி அறிவகம் முருகையா கோயில், மருதடி குருமணல் கந்தசுவாமி கோயில் தென்புலோலி உபய கதிர்காமம் கோயில், துன்னாலை வடக்கு அல்லையம்பதி முருகன் கோயில் ஆகியவற்றில் தைப்பூசத்தை ஒட்டி விசேட பூசைகள், வழிபாடுகள் என்பன நடைபெறும்.

* * *

யாழ்ப்பாணம், பெப். 7

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் தைப்பூச தினமான இன்று பிற்பகல் 2 மணிக்கு சுவாமி சித்ருபானந்த 'பரமானந்த சாதரம்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

(ஐ-3)

## வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், பெப். 7

வியாபாரிமூலை — இன்பர்செட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்துக்கெனப் புதிதாக அமைககப்பட்ட சப்பற வெள்ளோட்டம் இன்று முற்பகல் 11-30 மணிக்கு இடம்பெற உள்ளது.

திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த திர்ஷிகா கலைக்கூட ஸ்தபதி சிற்பக்கலாவாரிதி விஸ்வப்பிரம்மஸ்ரீ நடராஜா சற்குருநாதன் இந்தச் சப்பறத்தை வடிவமைத்துள்ளார்.

இன்றைய வெள்ளோட்ட நிகழ்வுகள் ஆத்தியடிப் பிள்ளையார் ஆலய முகாமையாளர் க. சண்முகநாதன் தலைமையில் இடம்பெறும். மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எஸ்.ஏ.ஈ ஏகநாதன் மற்றும் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ. பிரேமசங்கர் ஆகியோர் வெள்ளோட்ட நிகழ்வை ஆரம்பித்துவைப்பர், (ஐ-7)

## இந்துதர்மம் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 7

இந்து சமயப் பேரவையின் வெளியீடான இந்து தர்மம் இதழ் வெளியீட்டு விழா இன்று நண்பகல் 12 மணிக்கு தாவடி ஸ்ரீ அம்பலவாணவேத விநாயகர் கோயிலில் இடம்பெறவுள்ளது.

பேரவையின் தலைவர் அருட்கவி சி. விநாசித்தம்பி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் ஆசியுரைகள், வாழ்த்துரை, வெளியீட்டுரை ஆகியன இடம்பெறும்.

(ஐ-3)

## வித்தகம் சிறுவர்களின் பெற்றோருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெ. 7

தென்மராட்சி வித்தகம் சிறுவர் ஆதரவு இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்கள் நாளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கப்பல் மூலம் இங்கு வந்து சேர்வார்கள் என அறிவிக்கப்படுகிறது.

மேற்படி சிறுவர்களின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களை நாளை முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை தம்பசிட்டியில் உள்ள வித்தகம் நிலையத்துக்குத் தவறாது வருமாறு ''வித்தகர்'' பரமசாமி சுவாமிகள் கேட்டுள்ளார்.

(அ)

## பம்பலப்பிட்டியில் 'ஹெலிடூர்ஸ்' அலுவலகம்

கொழும்பு, பெப். 7

யாழ். விமானப் பயணிகளின் வசதி கருதி, 'ஹெலிடூர்ஸ்' அலுவலகம் கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் கற்பகம் கட்டடத்தில் திறக்கப்பட்டுள்ளது.

யாழ். செல்லும் பயணிகள் இங்கு பயணச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம்

(க)

## நாடக அரங்கியல் பட்டறை

யாழ்ப்பாணத்திலுள்ள மூப்பதுக்கும் அதிகமான பாடசாலைகளில் இருந்து பல துறைகளில் கல்வி பயிலும் உயர்தரவகுப்பு மாணவர்களுக்கான நாடக அரங்கியற் பட்டறைகளை யாழ். திருமறைக்கலாமன்ற நாடக பயிலகம் ஒழுங்கு செய்து நடத்துகின்றது.

இப்பட்டறைகளின் ஒரு பகுதி இன்று புதன்கிழமை காலை 9. மணிக்கு பிரதான வீதியிலுள்ள மறைக் கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெறும். மாணவர் மத்தியில் நாடக அரங்கியல் சார்ந்த பட்டறிவை வளர்க்கும் நோக்குடன் இப்பட்டறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இப்பட்டறை 10 ஆம், 11 ஆம், 17 ஆம், திகதிகளில் நடைபெறும். (க)

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

லுமாலா ஆண்கள் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இராசாவின் தோட்ட வீதி, சந்திக்கு அருகில் 284, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(83842)

### தவறிவிட்டது

24, மத்திய மேற்கு வீதி, குருநகர் என்னும் முகவரியைச் சேர்ந்த பற்றிக் செல்வராஜா என்பவருடைய விசேட அ. அட்டை [இல. 0901027934] 20 - 01 - 2001 அன்று யாழ்ப்பாணத்திற்கும் குருநகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கூறப்பட்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(83326)

இராசு புஸ்பராசா என்பவருடைய தேசிய அ. அட்டை (இல. 640882077V) 15-01-2001 அன்று நல்லூரடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பழம் றோட், ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். [83838]

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த நடராஜா தங்கரத்தினம் என்பவரின் தேசிய அ. அட்டை (375920549V), விசேட அடையாள அட்டை (0919 10580) இரண்டும் அச்சுவேலி பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அச்சுவேலி சூர்யா மருந்தகத்தில் அல்லது திருமதி தங்கரத்தினம் நடராசா, C/o க.சிவலிங்கம், கதிரிப்பாய், அச்சுவேலி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (83839)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

சேவல், புறொயிலர், கல்பேட் உட்பட தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

(83834)

புறொயிலர், சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸ் விற்பனைக்குண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு).

(83638)

### வீடு காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடு மற்றும் வெற்றுக் காணிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விள. இல. 1199, மே/பா, உதயன். (83734)

### சோதிட நிலைய இடமாற்றம்

22/1, கச்சேரி வீதியில் இதுவரை காலமும் இயங்கி வந்த வாணி சோதிடம், வாணி திருமாங்கல்ய சேவை என்பன இன்று 07-02-2001 முதல் இல. 95, சத்திரத்துச் சந்தி, வைரவர் ஆலயத்துக்கு அருகில் இடம் மாற்றப்படுகிறது. எமக்கு வேறு கிளைகள் இல்லை.

(83775)

### இன்று செவ்வாய் மாற்றம்

இன்று 07 - 02 - 2001 யுத்தச் செவ்வாய் வக்கிரச் சனியின் தீய பார்வையை விட்டு நீங்குவதால் போர் தணிந்து நாட்டில் சுமுக நிலையைத் தோற்றுவிக்கும். செவ்வாய் மாற்றம் எங்கும் விற்பனையாகிறது. கணிப்பாசிரியர் சத்யா, ஆனைக்கோட்டை. T. P. 021-2753

(83830)

### கல்வி

கொம்பியூட்டர் கல்வியும், A/L ஆங்கிலப் புத்தகத்தை அடிப்படையாக வைத்து ஆங்கிலக்கல்வியும் சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். தொடர்பு: S. C. இம்மானுவேல் B. Sc. (Ceylon), பொறியியலாளர், 41/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (83829)

### மணமக்கள் தேவை

ஸ்பொன்சரில் அழைக்கக் கூடிய மணமகன்மாருக்கு அழகான பெண்கள் தேவை. ஜாதகத்துடன் வரவும். ஞாயிறு பழம் பிள்ளையார் கோயில் மடம், சனி ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயிலடி நல்லூரிலும் சந்திக்கலாம். பொய்யாமொழி ஜோதிடம்.

(83740)

### தொலைபேசி தேவை

ரெலிக்கொம் தொலைபேசி இணைப்பு வைத்திருப்போர் உரிமை மாற்றம் செய்து விற்க விரும்பின் உடன் தொடர்பு கொள்க. விள. இல. 1200, மே/பா, உதயன்] (83789)

## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம்பிள்ளை ஜெகந்நாதன்

(ஓய்வு பெற்ற பொலிஸ் அத்தியட்சகர்)

தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வாசிகசாலை ஒழுங்கை, 3 ஆம் கட்டையடி கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை ஜெகந்நாதன் (ஓய்வு பெற்ற பொலீஸ் அத்தியட்சகர் 06 - 02 - 2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - நீலாயதாட்சி தம்பதிகளின் புதல்வனும் திருமதி இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் உதயராஜ் (ஜேர்மனி) கீதா (ஜேர்மனி), ஜெயவாணி (வாணி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயரத்னம் (ஓய்வு பெற்ற மதுவரிப் பரிசோதகர்). ஜெயசிங்கம் (A. C. I. Ltd) இரத்மலானை), ஜெயகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகேஸ்வரன் (ஜேர்மனி), திருமதி சுவர்ணா உதயராஜ் (ஜேர்மனி), கஜேந்திரன் (ஸ்ரீலங்கா புத்தகசாலை) ஆகியோரின் அன்புமாமனாரும் பிரீத்தனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:
க. கஜேந்திரன்
[மருமகன்]

3 ஆம் கட்டையடி,
கல்வியங்காடு.

(83846)

### குஞ்சியப்பு சங்கரநாராயணன்

(முன்னாள் சுபாஷ் ஹோட்டல் முகாமையாளர்)

கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குஞ்சியப்பு சங்கரநாராயணன் 29 — 01 — 2001 அன்று உடையார் கட்டில் காலமானார் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
ச. விஜயன் (மகன்)

பிடாரி அம்மன் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

(83843)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## இடமாற்றம்

# இந்திரன் ஜுவல்லர்ஸ்

(சாவகச்சேரி)

கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் என்னும் முகவரியில் இயங்கி வந்த மேற்படி எமது ஸ்தாபனம் இன்று (07-02-2001) புதன்கிழமை தொடக்கம்

**213A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
**(ராஜா திரையரங்கருகில்)**

என்னும் முகவரியில் இயங்கவுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளர்.

(83845)

### இடம்பெயர்ந்த மக்களுக்கு

## வீடியோப் படக்காட்சி மூலம் தொற்றுநோய்தடுப்பு ஆலோசனை

சுன்னாகம், கந்தரோடை கிராமங்களில் தொற்று நோய் பரவாமல் பாதுகாக்கும் முறைகள் பற்றிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் ஏற்பாட்டில் சுகாதார பகுதியினரால் வீடியோ தொலைக்காட்சிப் படம் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

இடம்பெயர்ந்தோர் முகாம்களிலேயே தொற்று நோய்கள் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதால் விசேடமாக முகாம்களில் உள்ளமக்களுக்கே தொலைக்காட்சிப் படம் மூலம் தொற்று நோய் பரவாதிருக்கக்கூடிய ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

நாளை வியாழக்கிழமை கந்தரோடை இக்கிராணை பாலர் பாடசாலை, கொத்தியாவத்தைப் பிள்ளையார் முகாம், சுன்னாகம்—சபாபதிப்பிள்ளை வீதி முகாம் ஆகிய இடங்களில் இந்தத் தொலைக்காட்சி விளக்கப் படம் ஒளிபரப்பப்படும் என்று சுகாதாரப் பரிசோதகர் கு. பத்மகுமார் தெரிவித்தார்.

(க-152)

## காணாமல்போன குடும்பங்களின் 25 சிறுவர்களுக்கு உதவி நிதி

### நாளை கைலாசபதி அரங்கில் வைபவம்

யாழ்ப்பாணம், பெப். 7

காணாமல்போன குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கும் உதவித் திட்டத்தின் கீழ் நாளை வியாழக்கிழமை மேலும் 25 சிறுவர்களுக்கு உதவி நிதி வழங்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாளை பிற்பகல் 3 மணிக்கு இந்த உதவி நிதி வழங்கும் வைபவம் நடைபெறும்

இத்திட்டத்தில் உதவி பெறவுள்ள சிறுவர்களின் விவரம் வருமாறு;-

கணேசலிங்கம் வண்ணமதி (நாவற்குழி தெற்கு), ஜெயராசா சுதர்சன் (வட்டுக்கோட்டை), ஐயாத்துரை அனுஜா (வட்டுக்கோட்டை), தயாபரன் யுவனியா (வட்டுக்கோட்டை), கோவிந்தசாமி தமிழரசி (அராலி வீதி, சங்கானை), சற்குணநாதன் சர்மிளா (வல்வெட்டித்துறை), கோமலேஸ்வரன் ஜெயமோகன் (நாவற்குழி தெற்கு), அம்பிகாபதி நிராஜ் (ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்).

பூவேந்திரராஜா சரண்ஜா (நாவற்குழி, கைதடி), சிவகுமார் லக்ஷனா (பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்), குனேந்திரராஜா விதுஷா (ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), சிவபுண்ணியமூர்த்தி சேருஷா (மீசாலை வடக்கு) கொடிகாமம்), திவாகரன் தாரணி (தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்), சாந்தகுமாரன் ருபிணி (பலாலி மேற்கு, வயாவிளான்) சுவிந்தராஜன் கயுதா (சித்திவிநாயகர், நாவற்குழி), கேதீஸ்வரன் குகப்பிரியா கைதடி நாவற்குழி —

சற்குணராஜா டிலக்சினி (கைதடி மேற்கு), விஜயகுமார் விஜயந்தின் (கரம்பைக்குறிச்சி, வரணி), இராஜமதி சுஜீபா (கரம்பைக்குறிச்சி, வரணி), பாலசுப்பிரமணியம் ஜானுஷா (யமுனா வீதி, நல்லூர்), அழகரத்தினம் கிரிகரன்] நிச்சாமம் சங்கானை], திலகரத்தினம் ருசியந்தன் [நாவற்குழி தெற்கு), கணேசமூர்த்தி புவீந்திரன் (சுழிபுரம் மத்தி.), சிவராஜா சங்கீதா (1 ஆம் குறுக்குத் வீதி யாழ்ப்பாணம்), செல்வசந்திரன் சந்தியா [ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்).

(க-5-ரி)

## மருத்துவ சுகாதார பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள சுகாதாரத் தொண்டர்களுக்கான மருத்துவ சுகாதாரப் பயிற்சி வகுப்பு இன்று புதன்கிழமை காலை 7.30 மணிக்கு நாவலர் கலாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்பு யாழ். மாவட்ட செஞ். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் ஆணையாளர் க. அருந்தவராஜா தலைமையில் நடைபெறும்.

(க—109)

## கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகர்
ந. துரைராசசிங்கம்
அவர்களது தந்தையார்

### வைரமுத்து நல்லதம்பி

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட அலுவலர்கள்.

தெல்லிப்பழை.

(83853)

## அவசர கலந்துரையாடல்

### BOOK BINDING - புத்தகம் கட்டுநர்

நாளை (8-2-2001) வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு மேற்படி நேர்முகத் தேர்வுக்காக அழைக்கப்பட்டவர்கள் ஆரியகுளம் சந்திக்கருகிலுள்ள D. M. I கல்வி நிலையத்தில் சமுகம் அளிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள். (நேர்முகத் தேர்வினை யாழ்ப்பாணத்தில் நடத்தும் ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு)

நேர்முகப்பரீட்சார்த்தி சார்பாக,
சீ. வரதராசா.

(83849)

# யாழ்.வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு ஸ்ரீ காளி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேக விழாச் சிறப்பிதழ் - 07-02-2001

## பக்தர்களுக்கு அருள் சொரியும் பத்திரகாளி அன்னை

யாழ்ப்பாணம் வண்ணை நகர் ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோயல் ஏறத்தாழ கி.பி 1774 ஆம் ஆண்டளவில் தமிழ் நாட்டில் இராஜதானியாக விளங்கிய தஞ்சாவூர் எனும் பேரூரில் இருந்து அழைத்து வரப்பட்ட விஸ்வப் பிராமண குலத்திலகமான வேத சாஸ்திர சிற்பசாஸ்திர விற்பன்னருமான பிரம்மஸ்ரீ கண்ணாயிரஸ்தபதியார் அவர்களால் வடிவம் பெறத் தொடங்கியது.

இந்தக் காலகட்டத்தில் இவரும் இவருடைய சிஷ்யர்களும் தங்குவதற்காக கோயில் அமையும் இடத்துக்கு முன்பக்கமாக அமைந்துள்ள கன்னாதிட்டி வீதியில் அடியார்க்கு நல்லான் மடத்தலையென்னும் சோழ மந்திரியின் பெயரால் அமைக்கப்பட்டிருந்த முக்கியத்துவம் வாய்ந்த தடாகக்கரையில் விடுதி அமைக்கப்பட்டிருந்தது.

அப்போது விஸ்வகர்மாக்களின் குலதெய்வமான காளி தேவிக்கு முதலில் இவ்விடத்தில் கோயில் கட்டி வழிபடத் தொடங்கினார்கள். இக்கோயில் கிட்டத்தட்ட 1775 ஆம் ஆண்டு தொடங்கி நடைபெற்றதாக சான்றுகள் கூறுகின்றன.

இச் சுற்றாடலில் விஸ்வகர்மாக்கள் அதிகமாக வாழ்ந்து வந்ததால் அவர்களினதும் முழு ஒத்துழைப்பில் இக் கைங்கர்யம் நிறைவேற்றப்பட்டது.

இக்காலத்திலே கோயிலில் இரண்டு காலப் பூஜைகள் நடைபெற்று வந்தன. அத்துடன் புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி விழாவைச் சிறப்பாக நடத்தி வந்தார்கள். தினமும் கொலு பூசையும் நடைபெற்றது. 10ஆம் நாள் மானம்பூ நடைபெற்று அம்பாள் குதிரை வாகனத்தில் வீதி வலம் வருகின்ற சிறப்பும் 11ஆம் நாள் திருவூஞ்சல் முடித்து வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்று அம்பாள் தண்டிகையில் வீதிவலம் வருவதுவும் 12ஆம் நாள் அன்று விடையார்த்தி எனும் வேட்டைத் திருவிழாவும் 15ஆம் நாளில் வரும் பௌர்ணமியில் சந்திர பூசையும் இக்கோயிலில் விஷேட அம்சங்களாகும்.

வசந்த மண்டபப் பூசையை அடுத்து அன்னை நறுமலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஹம்ச வாகனத்தில் எழுந்தருள் செய்து பக்தர்களுக்குக் காட்சி தருவாள். இத்துடன் நவராத்திரி விழாவும் நிறைவு பெறும்.

மேலும் 19ஆம் நூற்றாண்டின் 1800 ஆம் ஆண்டுப் பகுதியில் இக்கோயிலின் வளர்ச்சியில் இரண்டாம் கட்டம் ஆரம்பமானது. இக்கோயிலின் ஸ்தாபகர்களின் வழி வந்த விஸ்வப்பிராமண குலத்தவர்களும் இன்னும் இக் கிராமத்து பெருங்குடி மக்களாலும் பொருள் உதவப்பட்டு செங்கற்களால் முன்னர் இருந்ததை விட விசாலமாகக் கட்டப்பெற்று குடமுழுக்கு செய்யப்பட்டது என யாழ். அரச செயலகத்தில் பாதுகாக்கப்படும் சிறப்புச்சாசனங்களும் பதிவுகளும் கூறுகின்றன.

அத்துடன் இக்காலங்களில் நடைபெற்று வந்த நவராத்திரி விழாக்களில் தினமும் ஏறக்குறைய நூறு பக்தர்கள் வரையில் கலந்து கொள்வதாகவும் இந்தச் சான்றுகள் கூறுகின்றன.

இக்கோயில் உற்பத்திக்காலம் தொடங்கி சுமார் ஒரு நூற்றாண்டு காலம் வரை புராதன சம்பிரதாயங்களைப் பின்பற்றி இக்கோயிலின் நித்திய, நைமித்திய பூஜா கைங்கரியங்களையும் இவ்வாதீனத்தைச் சார்ந்த விஸ்வப் பிராமண குருமார்களே நடத்தி வந்தார்கள்.

முதலாவது குருவாகக் கடமையாற்றியவர் பிரம்மஸ்ரீ மல்லிகார்ஜுன் ஸ்தபதியார் ஆவார். இவருக்கு அடுத்தாற போல் இவரது இளைய சகோதரர் பிரம்மஸ்ரீ பிரசன்ன குமார் ஆச்சாரியார் அவர்களும் அதன் பின்னர் இவர்களின் மருமகனான மதுசூதன ஆச்சாரியாரும் ஆவார்கள்.

இந்த மூவருக்கும் பின்னர் இந் நாட்டிலே போதிய குருத்துவ அறிவு படைத்தவர்கள் மிகவும் அருகிவிட்ட காரணத்தால் ஒரு நூற்றாண்டின் பின் ஆருஷேய குருமார்களால் மேற்படி கைங்கரியங்கள் இன்று வரை நடத்தப்படுகிறது.

செங்கற்களால் கட்டப்பட்ட இக் கோயில் காலப் போக்கில் பழுதடைந்திருந்த காரணத்தால் 1891 ஆம் ஆண்டு அவை பிரிக்கப்பட்டு வைரக்கற்களால் கர்ப்பக்கிரகமும் அந்தராளமுக சோபன மண்டபம் எனும் இரண்டு மண்டபங்களையும் கட்டி முடித்து 1901 ஆம் ஆண்டு சர்வரி வருடம் ஆவணி மாதம் மஹா கும்பாபிஷேகம் நடை-



பெற்றதாக கோயில் சாசனங்கள் விஞ்ஞாபிக்கின்றன.

இப்பணிக்கும் முக்கியமாக விஸ்வ கர்ம குல மக்களே பொருள் உதவி புரிந்ததாக இச்சாசனங்கள் சாற்றுகின்றன.

அடுத்த படியாக 1918 ஆம் ஆண்டு வரையில் மஹா மண்டபத்தை அடுத்து இப்போது நிலை கொண்டிருக்கும் நிருத்த மண்டபத்தை அமைத்தார்கள். இங்கு தான் நந்தி, பலிபீடம், துவஜஸ்தம்பமேடை முதலியன இடம் பெற்றுள்ளன. அந்நாள்களிலேயே யாகவேதிகா மண்டபமும் அமைக்கப்பட்டு விட்டது.

இந்த மண்டபம் அமைக்கப்பட்ட காலத்திலேயே இப்போது கம்பீரமாகக் காட்சி தரும் தோரண வாயில் அதாவது இராஜகோபுர வாயில் என்பன வைரக்கற்களால் கட்டப்பட்டன. இப்பணியும் குல மக்களாலும் கிராமத்து வாழ் மக்களது பேருதவியாலுமே நிர்மாணிக்கப்பட்டது.

ஆலய நித்திய, நைமித்திய கருமங்கள், வேதாகம சாஸ்திரங்கள், விஸ்வப் பிராமண வம்சத்தாரின் பௌரோஹித்திய கருமங்கள், மறு சூக்தம், விஸ்வ சூக்தம் முதலிய வைதீக பிரயோகங்கள் வழியிலும் ஆருஹேயார்களால் திறம்பட நடைபெற்று வருகின்றன.

ஆருஹேய குருக்களாக முதன்முதலில் இங்கு கடமை ஏற்றவர் பிரம்ம ஸ்ரீ இராமலிங்கம் குருக்களாவார். இவரின் மறைவுக்குப் பின்னர் அவரது மருமகனான கந்தர் மடம் பிரம்ம ஸ்ரீ பரமேஸ்வரக் குருக்களும் அவரது மைந்தரான பிரம்ம ஸ்ரீ சோமஸ்கந்த குருக்களும் ஆவார்கள்.

இறுதியாக 1971ஆம் ஆண்டு முற்றிலும் புனரமைப்புச் செய்யும் நோக்குடன் இதன் ஆதீன கர்த்தர்கள் அவ்வேளையில் உரிய ஒரு சுபமுகூர்த்தத்தில் பாலஸ்தாபனஞ் செய்து திருப்பணிகள் ஆரம்பமாகின. கருப்பக் கிரகம், கருப்பக்கிரஹத்து விதன விமானம், மஹா மண்டப சிற்ப சபை விமானம், சுற்றுக் கோயில்கள், அவைகளின் விமானங்கள், கோயிலுக்கு வெளியேயுள்ள விநாயகர் ஆலயம் முதலியன முற்றிலும் புதுப்பிக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள.

கருவறையின் துவதன விமானம் மஹா மண்டபத்தின் சிற்பசபை விமானம் இவைகளில் அமைக்கப்பட்டிருக்கும் தேவதேவியர்கள் சக்தி கணங்கள் யோஹினிகள் முதலியவைகளின் உருவங்கள் பிரதிமைகள் அபூர்வ எழிலுடனும் வனப்புடனும் விளங்குகின்றன. இவ்வளவு சிறப்புடன் விளங்குகின்ற விமானங்களையும் அவைகளிலுள்ள சிற்பங்களையும் அமைத்தவர் சிற்பசாஸ்திர விற்பன்னரும் தமிழ்நாடு இராமநாதபுரம் ஜில்லாவின் ஒரு தாலுக்காவான நாட்டரசன் கோட்டை எனும் இராஜதானியில் புகழ்பெற்ற சிற்ப வித்தகர்களின் வழித் தோன்றலான பிரம்ம ஸ்ரீ நாகலிங்கம் ஸ்தபதியாராவார்.

இது பரிபூரணமடைந்து 1974ஆம் ஆண்டில் வைகாசி மாதம் 27ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போது கோயில் நித்திய பூஜைகளையும் விழாக்களையும் திறம்பட நடத்தி வந்த ஆருஹேய குருக்களான இருபாலை ஜோதீந்தரக் குருக்களால் மஹா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆண்டு தோறும் கும்பாபிஷேக தினத்தில் சங்காபிஷேகமும் நடைபெற்று வந்தது. தொடர்ந்து 1984 ஆம் ஆண்டில் கொடிமர பிரதிஷ்டை செய்து பிரம்மோற்சவத்தை வருடா வருடம் நடத்த அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்கள்.

சென்ற ஆண்டு 1999-3-19 பங்குனி மாதம் பாலஸ்தாபனம் நடைபெற்று தற்போது மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தப்படுகிறது. அனலைதீவைச் சேர்ந்த பிரம்ம ஸ்ரீ ந. தாமோதரம் ஐயர் அவர்களினால் தற்போது நித்திய பூஜைகளும் உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அத்துடன் சுபர்னஸரிஷி கோத்திர விஸ்வப்பிரம்ம குலத்தவர்களினால் அன்று முதல் இன்று வரை இக் கோயில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

## அம்பிகையின் திருக்குட முழுக்கு அனைவருக்கும் அருள் பாலிக்குக!

எங்கும் நிறைந்த இறைவனை ஆன்மாக்கள் லயப்பட்டு வழிபாடியற்றும் பொருட்டு ஆகமமுறைப்படி அழகுற அமைக்கப்படும் ஆலயத்தில் சுந்தர திருவுருவத்தில் சந்நித்தியமாக வீற்றிருந்த அருள்பாலிக்கும் பொருட்டு யாகம் அமைத்து சிவாச்சாரியர் களால் ஐம்புலனடக்கி ஐம்பூதங்களினால் பூஜித்து வழிபாடியற்றி செய்யப் படுவது திருமஞ்சன குட முழுக்காகிய கும்பாபிஷேகமாகும்.

*"எம் செயலால் ஆவதொன்றில்லை*
*எல்லாம் அவள் செயல்"*

எனும் நன்மொழி போன்று அருள் மிகு காளியம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் திருப்பணி பல நிறைவேறி தைப்பூசத் திருநாளாகிய இன்று திருக்குட முழுக்கு இனிதே நிறைவெய்திட அன்னையின் திருவருள் கைகூடியுள்ளது.

அனைவரும் சகல சௌபாக்கியம் பெற்று சிறப்புடன் வாழ அன்னை காளியம்பாள் அருள் புரிவாராக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*ஆலயப் பிரதம குரு*
**பிரம்மஸ்ரீ ந. தாமோதர ஐயர்.**

## மகாகும்பாபிஷேகக் கிரியைகள்

காலை 6.00 மணிக்கு - மகா பூர்ணாகுதி, யாக தீபாராதனை
6.56 மணிக்கு - ஸ்தூபி அபிஷேகம்
7.56 மணிக்குள் - மகா கும்பாபிஷேகம்
தொடர்ந்து - தர்சனம், ஆசார்ய சம்பாவனை, ஆசீர்வாதம், மகா அபிஷேகம், தீபாராதனை நடைபெறும்.

*மாலை 3.00 மணிக்கு திருவூஞ்சல் நடைபெற்று அம்பாள் திருவீதியுலா வந்து திருவிழா நிறைவுபெறும்.*

## சிறப்புற வாழ்வார்களாக!

வண்ணை திருவருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பிகையின் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் வேத திருமுறை கோசத்தோடு அடியார்களின் பக்திப் பரவசத்தோடும் இன்று நடைபெறுகின்றது.

"சிவதர்மம்" என்று விதந்து கூறப்படும் மஹாகும்பாபிஷேகம் அம்பிகையின் திருவுளப்பாங்கின் படியே நடைபெறுகின்றது. இங்கு நடைபெற்ற ஸ்வர்ண லட்சுமி பூஜை ஒரு விசேஷம் - யாகங்களும் பொலிவாக கிழக்கு வீதியில் இந்தியாவில் நடைபெறும் கும்பாபிஷேகத்தைப் போல் அமைக்கப்பட்டிருப்பதும் விசேஷம்.

சிறப்போடு நடைபெறும் மஹாகும்பாபிஷேகத்தின் பயனாக விஸ்வப்பிரம்மகுலத்தவர்கள் மட்டுமல்லாது பக்தர்கள் எல்லோரும் அம்பிகையின் திருவருட் சக்தியால் எல்லாச் செல்வங்களும் பெற்று சிறப்புற வாழ்வார்களாக.

*கும்பாபிஷேக சர்வபோதகர்*
**சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்**

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் கன்னாதிட்டி
திருவருள் மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
புனராவர்த்தன பிரதிஷ்டா
மகா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துபவர்கள்

அருள் முருகன் நகையகம்
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிவா நகை மாடம்
சாவகச்சேரி.

சாரங்கா நகைமாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:2480

சாரங்கன் நகை மாடம் அன் ரேட் சென்ரர்
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி15185)

தைப்பூசத் திருநாளில் 4ஆவது அகவையில்
காலடி எடுத்து வைக்கும் சாரங்கா நகைமாடம்
தனது இணை ஸ்தாபனமாகிய
சாரங்கன் நகை மாடம் அன் ரேட் சென்ரர்
என்னும் ஸ்தாபனத்தை இல.45, கஸ்தூரியார் வீதியில்
விக்கிரம வருடம் தைமாதம் 25ஆம் திகதி இன்று
(07.02.2001) பி.ப 5.05 மணிக்கும் 6.35 மணிக்கும்
இடையில் உள்ள சுபமுகூர்த்த வேளையில் திறந்து
வைக்கிறோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றோம்.
*முக்கிய குறிப்பு: சாவகச்சேரியில் இயங்கிவந்த சிவா நகைமாடமும் சாரங்கன் நகைமாடத்துடன் இணைந்து* இயங்கும் என்பதையும் அத்துடன் 07-02-2001 முதல் 07-03-2001 வரையும் வாடிக்கையாளர்களுக்கு விசேட விலைக்கழிவுகள் உண்டு.

*ரம்மியமான நகைத் தெரிவுக்கு*
*ராசியான இடம்*
சானுகா ஜுவல்லர்ஸ்
(அழகு நகைகளின் அரங்கம்)
200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
SHANUGA JEWELLERS
200G, Kasthuriar Road,
Jaffna.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.எஸ்.எக்ஸ் குலநாயகம் அவர்கள்**

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட எமது கிளைக்குழு உறுப்பினர் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ்.பல நோ.கூ.சங்க
ஸ்ரேசன் கிளை - 28,
கிளைக்குழு உறுப்பினர்கள்.

யாழ்ப்பாணம்.
(83815)

---

ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்

## பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்



மணிவிழா நாயகன்

**பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்.**

எமது தேவஸ்தான ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் சனிக்கிழமைகளில் திவ்ய பிரபந்தப் பேருரை நடத்திச் சிறப்பிக்கும் மணிவிழா நாயகன் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களைப் பல்லாண்டுகள் நீடூழி வாழ்க என்று பாராட்டி வாழ்த்துகிறோம்.

ஆதீன மகாசபை,
வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப்பெருமாள்
தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

(83791)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி
## நன்றி நவிலல்



ஆண்டவன் படைப்பு
01 - 01 - 1915

ஆண்டவன் அழைப்பு
08 - 01 - 2001

அமரர்

**பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை**

(ஓய்வு பெற்ற அதிபர், வளலாய் மேற்கு)

அன்போடு அரவணைத்து
அறிவாலே உயர வைத்து
பண்பாக வாழவைத்த எமது
அன்பான தந்தையின் ஆத்மா
அம்மனடியில் சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவர் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், முன்னின்று உதவி புரிந்தோருக்கும், தபால் மூலம் ஆறுதல் கூறியோருக்கும், 08. 01. 2001 அன்று நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும் எமது இதயங்கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது இல்லத்தில் இன்று (07. 02. 2001) புதன்கிழமை நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்*

திரு.நா.சத்தியநாதன்
*கோட்டக்கல்வி அதிகாரி,
சாவகச்சேரி.*

(83767)

---

### மீண்டும் பூசைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.7

கடந்த ஒன்பது மாத காலமாக யுத்த நடவடிக்கை காரணமாகத் தடைப்பட்டிருந்த யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு, கடற்கரை வீதிச் சந்தி ஸ்ரீ ஞானவைரவர், ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் தற்போது மீண்டும் பூசைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 9 மணியளவில் பிராயச்சித்த அபிஷேகத்துடன் பூசை ஆரம்பமாகியது. அதைத் தொடர்ந்து தினசரி மாலை 4.30 மணிக்கு நித்திய பூசை நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம)

### ஆசிரியர்களுக்கு கணனிப் பயிற்சி

அச்சுவேலி,பெப்.7

பாடசாலை ஆசிரியர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பாடசாலை தோறும் தெரிந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு தொகுதி தொகுதியாக குறுகிய காலப்பயிற்சி அளிக்கப்படும்.

பாடசாலைகளுக்கு வழங்கப்படும் கணனிகளை உரிய முறையில் பயன்படுத்தி உச்சப்பயனை அடைவதற்கு வசதியாகவே ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

கணனிப்பயிற்சி பெறவிரும்பும் ஆசிரியர்களின் விவரம் வலயக் கல்வி அலுவலகங்களால் சேகரிக்கப்பட்டு வருகின்றது. (க-11)

### கம்பங்கள் நட்டு ஒரு வருடமாகியும் மின்சாரம் இல்லை

சங்கானை,பெப்.7

அராலிக் கிராமத்தில் மின் கம்பங்கள் நடப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் இதுவரை மின்சார விநியோகம் கிடைக்கவில்லை.

அராலி கிழக்குப் பகுதிக்கு மின்சார விநியோகத்திற்கான கம்பங்கள் நட்டவுடன், மின்சாரம் விரைவில் கிடைக்குமென எதிர்பார்த்து, தத்தம் வீடுகளுக்கு மின் வேலைகளைப பூர்த்திசெய்துள்ள மக்கள், ஏமாந்து போன நிலையில் உள்ளனர். (க-29)

### கூடைப்பந்தாட்ட அரை இறுதி ஆட்டங்கள்

வலி. வடக்கு,பெப்.7

யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆட்டங்களில் கலந்து பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

சென்றலைட்ஸ் வி.க எதிர் ஜொலிஸ்ரார் வி.க.

யாழ். பல்கலைக்கழக வி.க எதிர் பற்றீசியன்ஸ் வி.க. (ம-86)

### ஆரம்பக் கல்வி அறிமுகக் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு,பெப்.7

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளில் தரம் மூன்று புதிய பாடத்திட்ட ஆரம்பக்கல்வி அறிமுகக் கருத்தரங்கு எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரிய நிலையத்தில் நடைபெறும்.

3 ஆம் தரத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது அனுப்பிவைக்குமாறு ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி. மாதவகுமாரன் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (க-152)

### நாளை திறப்பு விழா

வலிமேற்கு,பெப்.7

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் புதிய நூலகமும் கணனிக் கூடமும் நாளை வியாழன் காலை திறந்து வைக்கப்படும்.

வித்தியாலய அதிபர் எஸ். நடராசா தலைமையில் திறப்பு விழா இடம்பெறும். (க-175)

### ரூ.5 லட்சம் நிதி உதவி

கோப்பாய்,பெப்.7

வடக்கு கிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தால் கோப்பாய் பாலர் பகல் விடுதியை புனரமைப்பதற்கு 5 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. (க-72)

---

## இலங்கை மின்சார சபை
யாழ்.பிரதேசம்

### மின்தடை பற்றிய அறிவித்தல்

உயர் அழுத்த மின்மார்க்கங்களில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால் 10.02.2001 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரை யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

இதனால் ஏற்படும் சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கை மின்சார சபை.

(C/15143)

---

## பிறந்த நாள் வாழ்த்து
HAPPY BIRTHDAY



### செல்வன் ஜெயசீலன் அபிஷேக்

மட்டக்களப்பு, இருதயபுரத்தைச் சேர்ந்த **ஜெயசீலன்** யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த **துஜிதா** தம்பதிகளின் செல்வப்புதல்வன் **அபிஷேக்** தனது முதலாவது பிறந்தநாளை இன்று 07-02-2001 ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மாமார், அம்மப்பாமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், மாமாமார், அத்தைமார், பூட்டன்மார், பூட்டிமார், அன்ரிமார், சித்தப்பாமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர் மற்றும் அனைவரும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அருளால் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ வாழ்த்துகிறார்கள்.

*வி. தங்கம்மா,*
(பூட்டி)

*சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.*

(83798)

---

ஓம் ஸ்ரீ ராமஜெயம்

அன்பிலும் பண்பிலும் உயர்ந்த பண்பாளரை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



'நல்லதைத் தருபவர்களே சிறந்ததைப் பெறுவார்கள்'
யாழ். மாநகரசபை ஆணையாளர்

**உயர்திரு. வே.பொ.பாலசிங்கம் அவர்கள்**

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்றதனைப் பாராட்டி வாழ்த்துவதோடு வண்ணை ஸ்ரீ வேங்கடேசன் அருளால் மேன் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று மக்களின் செழிப்பான வாழ்வுக்கு சேவையாற்றிப் பல்லாண்டு வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

*வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்
தேவஸ்தான ஆதீன மகாசபை*

(83790)

# திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய கர்ப்பக்கிரக, இராஜகோபுர மகாகும்பாபிஷேகச் சிறப்பிதழ்

## அன்னையின் அருள் பொழியும் திருத்தலம் திருமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்

தெய்வ வழிபாட்டிலே தேவி வழிபாடு மிகப் பழைமையானது. இருக்கு வேத காலத்திற்கு முன்னர் பழைய உலகத்தின் முக்கிய தேவதையாக - தேவி வழிபாடு இருந்தது. மொகஞ்சதாரோ நாகரிகம் பற்றிய தொல்பொருள் ஆய்வுகளிலே கிடைத்த சரித்திரச் சின்னங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

அந்த நாகரிகத்திலே பிரபலமாக இருந்த அம்பாதேவி வழிபாடு பாரசீகத்திலிருந்து கிரீஸ் வரை கூட அப்போது பரவியிருந்தது என்று சரித்திர ஆய்வாளர்கள் பகர்கின்றனர். அம்பாதேவியின் வாகனமும் சிங்கம்தான். அவளும் தீமைகளைச் சம்காரம் செய்து நீதிக்கு வெற்றியைத் தரும் வீர நாயகியே.

தமிழர்களுடைய வாழ்விலே அவள் காவல் தெய்வமாகவும் காக்கும் அன்னையாகவும் போற்றப்படுகின்றாள். வீரத்தின் ஊற்றுக் கண்ணாக நம் மக்கள் அவளையே போற்றுவர்.

தமிழகத்தின் தெற்கு எல்லையைக் காக்கும் குமரி அம்மனாகவும், பாரதத்தின் வடக்கிலே இமயத்தின் தலைவியாக 'இமயக்கிழவி' என்றும் அவளை இறைஞ்சுவர்.

மகிஷாசுரமர்த்தினியாகிய காளியைக் கொற்றவையாக சிலப்பதிகாரம் கூறுகிறது.

சேரன்செங்குட்டுவன் காலத்தில் தொடங்கிய பத்தினித் தெய்வ வழிபாடு கூட காலக்கிரமத்தில் காளியம்மன் வழிபாட்டுடன் இரண்டறக் கலந்ததாக நமது பெரியோர்கள் கூறுகின்றனர்.

நமது வேதங்களும், ஆகமங்களும் தந்திரங்களும் மகாபாரதம் போன்ற இதிகாசங்களும், புராணங்களும் கூட காளி வழிபாட்டைச் சிறப்பித்துக் கூறத் தவறவில்லை.

விடுதலைக் கவிஞன் பாரதி தன் நாட்டு விடுதலைக்காக வீரம் வேண்டி "தேசமுத்துமாரியை" ஏத்தித் தொழுதான். சுப்பிரமணிய சிவாவும், வீர மரபு படைத்த ஜான்ஸிராணியும் கூட இறுதி வரை வணங்கியது மகாகாளியையே.

ஏன், இந்திய விடுதலை வரலாற்றில் புகழ் பூத்த வீரமான நெஞ்சன் வீரபாண்டிய கட்டப்பொம்மன் கூட தூக்குக் கயிற்றை முத்தமிட்ட போது குல தெய்வமான "சக்கம்மா" என்கின்ற காளியைத் தான் வணங்கினான். அவனது வீர வாழ்வை உணர்வும் உயிருமாக நின்று வழிநடத்தியவள் அவளே!

ஆத்மீகப் புரட்சிக்கு வித்திட்ட இராமகிருஷ்ணரும் அவர் தம் வழியில் சுவாமி விவேகானந்தரும் கூட ஆத்மார்த்த ரீதியாக தரிசித்தது அன்னை காளியையே.

இவ்வாறு அன்னையாக விளங்கும் காளியம்மா நாம் அவள் மீது வைக்கும் பிரேமை கண்டு மனம் புளகாங்கிதமடைந்து எம்மீது அன்பு வைத்து அருள் புரிவாள்.

ஈழத்திலே அன்னை காளியின் அருள் பொழியும் அற்புதத் திருத்தலமாக விளங்குவது திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் என்பது அன்னை அடியார்களின் மனம் நிறைந்த கணிப்பீடு.

நாம் சிறக்க - நம் சமூகம் சிறக்க- நம் இனம் சிறக்க - நம் நாடு சிறக்க காளி அன்னையின் ஆசியும் நமக்குக் கிட்டுவதாக.

## காளியின் பக்தர்களாக நாம் பக்குவமடைய வேண்டும்


இறைவழிபாட்டில் நாம் ஈடுபடும் போது சமயச் சடங்குகளைப் பேணுகின்ற அதேவேளை, அச்சடங்குகளுக்கு அப்பால் மிளிரும் உணர்வுகளை உணர வேண்டும்.

இறைவியிடத்து காதல் மிக்கூறி, கசிந்து கண்ணீர் மல்க பக்தி செலுத்தும் போது, நாம் இறைவியை நேசிப்பவர்களாவோம்.

அதே போன்று இறைவியால் நேசிக்கப்படுபவர்களாக நாம் மாற வேண்டும். இறைவி நேசிக்கும் பக்தர்களாக நாம் மாறுவதற்கு நாம் அருகதை பெற வேண்டும். அத்தகைய அருகதை பெறுவதற்கு நாம் பக்குவமடைய வேண்டும்.


சேவை மூலம் அன்பு பெருகும் அருளுணர்வு பெருகும். எளிமை உண்டாகும். யான் எனது என்ற செருக்கு அகலும். நான் ஒரு கருவி மட்டுமே என்ற தெளிவு பிறக்கும். என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற பயன் கருதாத மனப்பாங்கு, நிஷ்காமிய சேவை உணர்வு தலைதூக்கும்.

அப்போது நாம் இறைவியை நேசித்தாலும், நேசிக்காவிட்டாலும், இறைவி எம்மை நாடுவார். எமக்கு இன்னருள் பொழிவாள்.



ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் அழகுமிகு தோற்றம்.

சிறப்பிதழ் தொகுப்பு:
**வே.வரதசுந்தரம்**



திருகோணமலையின் மத்தியில் அமர்ந்து அருள் சுரக்கும் அன்னை ஜெகன் மாதா ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்.

## இப்படியும் ஓர் அற்புதம்!

ஒரு காலத்தில் திருகோணமலை பத்திரகாளி பூசகர் ஒருவர் பூசையினை முடித்துக் கொண்டு இரவு திருக்கதவைப் பூட்டித் தன் வீடு சென்றுவிட்டார். வீடு சென்று பின்னர் தன் மகனைக் காணாது திகைத்துப் போனார். எங்கும் தேடியும் மகனைக் காணவில்லை. திரும்பி அவர் ஆலயம் சென்று மகனைத் தேடினார். மகன் ஆலயத்துள் இருப்பதை அறிந்தார்.

பூசை முடிந்து திருக்கதவை அடைத்த பின்னர் கதவைத் திறப்பது ஆகம விதிகளுக்கு முரணானது என்பதை உணர்ந்து மறுநாள் காலை வந்து மகனை அழைத்துச் செல்வதாக முடிவு செய்தார். ஆனால் மனைவியோ இதற்கு இசையவில்லை. புத்திர பாசத்தினால் உந்தப்பட்ட அவர் மனைவி உடனே மகனை அழைத்துச் செல்ல வேண்டும் என்று விடாப்பிடியாக நின்றாராம்.

இதனால் அடைத்த திருக்கதவை அந்தணர் திறந்தார். திறந்ததுதான் தாமதம் வைரவர் அப்பிள்ளையை இரண்டாகக் கிழித்துப் போடுவதைக் கண்டார். இப்படியும் ஓர் அற்புதம்!.

இது இறைவியின் மறக்கருணையை எமக்கு நினைவூட்டுகிறது. புதல்வர்களைத் திருத்தப் பெற்றோர் கண்டிப்பதும், சில வேளைகளில் தண்டிப்பதும் இயல்பன்றோ. ஆனால் அக் கண்டிப்புக்கு ஊடாக, தண்டனைக்கும் ஊடாக பரிவுணர்ச்சியை நாம் காண்கிறோம் அல்லவா! அது போன்றதே இறைவியின் மறக்கருணையும். சிவஞானசித்தியாரில் உள்ள ஒரு பாடல் மறக்கருணையை எடுத்தியம்புகிறது.

*தந்தையாய் பெற்ற தத்தம்*
*புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்*
*வந்திடா விடின் உறுக்கி*
*வளாரினால் அடித்துத் தீய*
*பந்தமும் இடுவர், எல்லாம்*
*பார்த்திடின் பரிவே ஆகும்*
*இந்நீர் முறைமை யன்றோ*
*ஈசனார் முனிவும் என்றும்.*

## கோணையப்பனை நோக்கும் அன்னை பத்திரகாளி

மலைமகள் சிறு பிராயத்தில் தவஞ் செய்யச் செல்கிறாள். அப்பொழுது அவள் பெற்றோர் 'அம்மா! வேண்டா' என்றார்கள்.

உ (அம்மா) மா (வேண்டா) என்று பொருள்பட உமா என்ற பெயர் வழங்கலாயிற்று என்பார்கள் அறிஞர்கள்.

இமயமலை மன்னன் தனக்கு சிவசக்தி, மகளாகப் பிறக்கவேண்டும் என்று தவமியற்றினான். அவன் தவஞ்செய்கையில் பொய்கை ஒன்றில் அழகிய தாமரை மலர்ந்திருக்க அதன் கண்ணே அழகிய குழந்தையாக அம்பிகை இருந்தாள். அதனை அவரும் மனைவியும் வளர்த்தனர். சிவபெருமானுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தனர்.

பிருங்கி என்ற முனிவர் தினமும் சிவனை வழிபட்டு வந்தார். ஒருநாள் இவர் வழிபடச் சென்ற வேளை சிவன் உமையுடன் இருந்தார். பிருங்கி முனிவர் அவர்கள் இடையே சென்று சிவனை மட்டும் வலம் வந்தார்

தன்னை உதாசீனஞ் செய்ததாக வருத்தப்பட்டாள் உமையாள். "இறைவனும் இறைவியும் ஒன்றே என்பதை இப்பக்தன் அறியான் போலும். இருவரும் ஒரு வடிவமாகத் தோன்றினால் இவ்வடியான் அப்படிச் செய்வானா? எனவே தங்கள் உடலில் ஒரு பாதியை எனக்குத் தாருங்கள் இப்படி உமையாள் வேண்ட சிவபிரான் தன்னுடலில் ஒரு பாகத்தை சரிபாதியை உமையாளுக்குக் கொடுத்தார்; பகவன் ஆனார். அர்த்தநாரீஸ்வரர் வடிவம் தோன்றியது.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

என்ற வள்ளுவன் கூற்றினை எண்ணிப் பார்க்கலாம்.

இறைவனை அர்த்தநாரீஸ்வர வடிவாகக் கண்டவர்கள் நமது மூதாதையர். இறைவியை இடப்பாகத்தே வைத்திருப்பவன் என்பதால் அவன் பகவன் ஆனான்.

திருஞானசம்பந்தர் தான் பாடிய முதற் பாடலில் இறைவனை அர்த்தநாரீஸ்வரராகக் காண்கிறார்.

"தோடுடைய செவியன்" என்று தன்பாடலைத் தொடங்குகிறார். தோடுடைய செவியள் என்று பாடவில்லை. இடப்பாகத்தில் இறைவி இருப்பதால் அச்செவியினை தோடு அலங்கரிக்க இறைவனை 'தோடுடைய செவியன்' என்று பாடுகிறார்.

இதேபோன்று திருகோணமலைப் பதிகத்தைத் தொடங்கும் போது ஷநிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும் நிமலர்; என்று கோண நாயகனைப் பாடித் துதிக்கின்றார்.

கோணேசப் பெருமானின் ஒரு திருவடியில் ஆண்கள் அணியும் திருக்கழலும் மற்றைய திருவடியில் பெண்களின் அணிகலனான சிலம்பும் காணப்படுவதாகப் பாடுகிறார் கோணேசப் பெருமானை சம்பந்த நாயனார்.

அர்த்தநாரீஸ்வரர் திருத்தோற்றத்தில் கண்டு பேருவகை மேலிட பல பாடல்கள் பாடிப்பரவுகிறார்.

இந்தப்பின்னணியில் பத்திரகாளி அம்மன் கோயில் பாடல் பெற்ற கோணேசர் திருக்கோயிலினை நோக்கியவாறு அமைந்துள்ள திருவருள் சித்தத்தினை நினைந்து நினைந்து பெருமகிழ்வடைகிறோம். இதனாலே இக்கோயிலின் திருவருட் சிறப்பு பன்மடங்காகிறது. இம்மையில் செல்வம் சேர்த்து மாங் கல்யம், மக்கள் செல்வம் எய்தி இன்பம் துய்க்க இறைவியினை வழிபட்ட பக்தர்கள் கோணையப்பனை நோக்கி மறுமையில் திருவடிப் பேறு மோட்சம் வேண்டி நிற்பர்.

## கூந்தலைக் கத்தரித்து அம்பாளுக்கு ஈந்த பெண்!

ஓர் அழகான பெண் தன் கூந்தலை முடியாமல் விரித்தவாறு செருக்குடன் திருகோணமலை பத்திரகாளி கோயில் முன்னே கடந்து சென்றாள். உடனே அவள் தலை ஒரு புறந் திரும்பிவிட்டது.

பல வைத்தியர்களை நாடினாள். பல வகையான மருத்துவம் செய்து பார்த்தாள். ஆனால் நோய் குணமடையவில்லை. மிகவும் மனவேதனையுடன், தன் பிழை உணர்ந்து, இறைவியை நினைந்து நினைந்து கண்ணீர் உகுத்தவாறு நித்திரைக்குச் சென்றாள்.

இறைவி அவள் முன்னே தோன்றினாள். 'நாளை எனது சந்நிதிக்கு வா. அங்கே உனது முடியை நறுக்கி எனது சிரசுக்குத் தா. அப்போது உன் நோய் தீரும்' இப்படிக் கூறினாள் பத்திரகாளி.

இதைக்கேட்ட அப்பெண் அதிகாலை எழுந்தாள். நீராடிப் பத்திரகாளி சந்நிதி சென்றாள். கூரிய கத்தரிக் கோலைக் கையில் எடுத்துச் சென்றாள். தனது கூந்தலை நறுக்கினாள். அம்பாளுக்கு ஈந்தாள். சாம்பிராணி வாடை எங்கும் பரவியது. அப்பெண்ணின் நோயும் அகன்றது.

பல்லாண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற இந்நிகழ்வை திருகோணமலை பத்திரகாளி அம்மன் காவியத்தில் காண்கிறோம்.

### தாயே சரணம்!

திருமலை மக்களின் அனுக்கிரக நாயகியான ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில், தைப்பூச நாளான இன்று புனராவர்த்தன சம்புரோக்ஷண நூதன ஆலய சப்த தள இராஜகோபுர, கர்ப்பக கிரக திரிதள விமான மகாகும்பாபிஷேகம் முற்பகல் 10 மணி முதல் 11 மணி வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறுகிறது.

கிரியைகள் மு.ப.9.30 மணிக்கு ஆரம்பமாகும். இராஜகோபுர; மூல மூர்த்திகள், ஸ்தூபி அபிஷேகம், பிரதான கும்ப வீதிப்பிரதக்ஷணம், புஷ்பாஞ்சலி, மூலாலயப் பிரவேசம் என்பன நடைபெற்று - சுபமுகூர்த்த வேளையில் மூல மூர்த்திகள், பரிவார மூர்த்திகள் கும்பாபிஷேகமும், அபிஷேகமும் நடைபெறும். எங்கும் நிறைந்த பத்திரகாளித் தேவியின் பாதங்களை இறைஞ்சி அவளது நல்லருள் வேண்டி இச் சிறப்பிதழ் வெளியிடப்படுகிறது.



நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்.போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சைக் கூடத் திறப்புவிழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் மற்றும் கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி நவமலர் கனகரத்தினம், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் நிற்பதனையும் - சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

# யாழ்ப்பாணத்தில் கண்தான வங்கி அமைப்பது மிக அவசர தேவையாகும்

## கண் சத்திரசிகிச்சைக் கூடத் திறப்பு விழாவில் பேராசிரியர் சண்முகதாஸ்

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்ப்பாணத்தில் கண்தான வங்கி ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டியது மிகவும் அவசரத் தேவையாகும்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கண் சத்திரசிகிச்சை கூடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

லண்டன் சிவயோகம் அறக்கட்டளையினரின் உதவியுடனும் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் அயரா முயற்சியாலும் அமைக்கப்பட்ட இந்த சிகிச்சைக் கூட கட்டடத்தை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி நவமலர் கனகரத்தினம் தலைமையில் திறப்பு விழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தொடர்ந்து அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

கண்களைத் தானம் செய்கின்ற உணர்வை மக்கள் மத்தியில் வளர்க்க வேண்டும். இதனால் கண் பார்வையற்றவர்களுக்குக் கண்களை வழங்க முடியும். தென்னிலங்கையில் பௌத்த கண்தான சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டு அங்குள்ள மக்களுக்கு அச்சங்கம் சேவையாற்றி வருகின்றது - என்று கூறினார்.

### துணைவேந்தர்

யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றும் போது கூறியதாவது:-

யாழ்.போதனா வைத்தியசாலையின் தரத்தினைப் பலவழிகளிலும் முன்னேற்ற வேண்டும். நகரின் மத்தியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த வைத்தியசாலை அமைந்திருப்பது வரப்பிரசாதமாகும்.

வடபகுதியில் பிரதான ஆஸ்பத்திரியாக விளங்கும் இந்த போதனா வைத்தியசாலை மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் தாதியர்கள் பயிற்சி பெறுகின்ற இடமாகவும் இருக்கின்றது.

இங்கு ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், ஆயிரம் பேருக்கு மறைமுகமாவும் தொழில் வாய்ப்புகளை வழங்கமுடியும். இந்த ஆஸ்பத்திரியை மேம்படுத்துவதன் மூலம் மேல் மட்ட சிகிச்சைக்காக கொழும்பு மற்றும் இந்தியா செல்லும் யாழ்ப்பாண நோயாளர்களுக்கு ஏற்படும் செலவுகளையும் குறைக்க முடியும்.

பொதுமக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த வைத்தியசாலையை முன்னேற்றுவதற்கு தாராளமாக உதவவேண்டும். குறைந்த வசதிகள் இருக்கின்ற போதிலும் இங்குள்ள டாக்டர்கள் மற்றும் ஊழியர்கள் மிகச் சிறப்பாகச் சேவையாற்றுகின்றனர்.

யாழ்.போதனாவைத்தியசாலையின் ஆளணியும், உட்கட்டுமானமும் வளர வேண்டும். நாம் அனைவரும் இணைந்து செயற்பட்டால் இந்தச் சாதனைகளைச் செய்யமுடியும் என்றும் அவர் கூறினார்.

### சிவத்தமிழ்ச் செல்வி

விழாவின் பிரதம விருந்தினரான சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றும் போது கூறியதாவது:-

நல்ல பணிகளை நாம் முன்னின்று செய்யவேண்டும். வைத்தியசாலை பணிகளுக்கு நாம் அரசாங்கத்தை நம்பியிருக்கக் கூடாது.

துர்க்காதேவி தேவஸ்தானம் இந்தப் பணிகளுக்கு தாராளமாக உதவிவருகிறது. இன்றைய இந்த கண் சத்திரசிகிச்சை கூடப் பணிகளுக்கு எமது தேவஸ்தானம் 50 ஆயிரம் ரூபாவை வழங்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எங்களுடைய மண்ணில் உள்ள வைத்தியசாலையினை முன்னேற்ற வேண்டிய கடமை எங்களுக்கு உண்டு.

கண்சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் குகதாசனின் சேவைகளைப் பாராட்டுகின்றோம். அவரது பணிகள் மேலும் வளரவேண்டும் என்றும் அவர் கூறினார்.

### அரசாங்க அதிபர்

யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் உரையாற்றும் போது கூறியதாவது:-

யாழ் போதனா வைத்தியசாலைக்கு அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய உதவிகளைப் பெறவேண்டும். மருத்துவபீட மாணவர்கள் தமது உள்ளகப் பயிற்சிகளை இங்கேயே பயில்வதற்கான சகல வசதிகளும் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

### ஆறு. திருமுருகன்

சத்திரசிகிச்சைக் கூடத்தை அமைப்பதற்குக் காரணமாகவிருந்த செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன உரையாற்றும்போது கூறியதாவது:-

யாழ்ப்பாண மக்களிடையே கண் தானம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண இந்துக்கள் கண்தானச் சபை ஒன்றினை ஆரம்பித்துள்ளோம். தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா முதற் கையெழுத்திட்டு இந்தக் கண்தானச் சபையை ஆரம்பித்து வைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்து சமூகத்திலே கண்களைத் தானம் செய்கின்ற பக்குவம் இன்னும் வளரவில்லை.

யாழ். மாவட்டத்தில் இதுவரையும் 78 பேர் மாற்றுக் கண் பெறுவதற்காக காத்திருக்கிறார்கள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

நான் லண்டன் சென்றிருந்த போது யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சைக்கூடம் தொடர்பாக தெரிவித்திருந்தேன்.

இதனை அறிந்துகொண்ட லண்டன் சிவயோகம் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் இதற்கான உதவியை தாங்கள் வழங்குவதாகத் தெரிவித்தனர்.

எனவே அவர்களின் பேருதவியினால் இந்த சிகிச்சைக்கூடம் இன்று இங்கே திறந்து வைக்கப்பட்டுள்ளது.

லண்டனில் நான் தங்கி நின்ற போது 12 லட்சம் ரூபா வரையில் அங்குள்ள நண்பர்களினால் வழங்கப்பட்டது. அந்த நிதியினையும் இந்த சத்திரசிகிச்சை கூடம் அமைப்பதற்கு வழங்கியுள்ளேன்.

வசதிகள் எதுவும் அற்ற நிலையில் பலத்த சிரமத்தின் மத்தியில் டாக்டர் குகதாசன் கண் வைத்திய சேவையினை இங்கு வழங்கி வருகிறார். தனி ஒருவராக நின்று அவர் ஆற்றி வரும் பணிகளுக்கு உதவியாக இந்த சத்திர சிகிச்சைக் கூடம் அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

### வைத்தியசாலை பணிப்பாளர்

வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி நவமலர் கனகரட்ணம் தனது தலைமை உரையின் போது கூறியதாவது:-

நவீன மருத்துவ உபகரணங்களுககும், கட்டடங்களுக்கும் தொடர்ந்து அரசாங்கத்தை நம்பியிருக்க முடியாது. எனவே இவற்றிற்கு அனைவரும் உதவவேண்டும்.

கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் குகதாசன், இருக்கும் வசதிகளுடன் தனது வைத்திய சேவையை நடத்தி வருகிறார். நிர்வாகத்துக்கு எந்த விதமான பிரச்சினையையும் கொடுக்காது கடமை ஆற்றிவரும் அவரின் கனவு இந்த சத்திர சிகிச்சை கூடத்தின் மூலம் நனவாகிறது. இந்தச் சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு லயன்ஸ் கழகத்தினரால் மருததுவ உபகரணங்களும், அம்புலன்ஸ்'ம் நன் கொடையாக வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள் ஆசியுரை வழங்கினார். (க-5)

# முஸ்லிம் காங்கிரஸ் தலைமை குறித்து கட்சிக்குள் முரண்பட்ட கருத்துக்கள்

கொழும்பு,பெப்.7

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர்களைத் தெரிவு செய்யும் மாநாடு எதிர்வரும் 11 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் நேரத்தில்-

கட்சித் தலைமை குறித்து இரு தரப்புகளுக்கு இடையில் பெரும் போராட்டம் அரம்பித்துள்ளது.

தற்சமயம் உள்ளது போன்று இணைத்தலைவர் பதவி தொடர வேண்டும் என்று ஒருசாராரும் -

ஏக தலைவர்முறை கொண்டுவரப்பட வேண்டும் என்று மற்றுமொரு சாராரும் குரல் எழுப்பி வருவதுடன் அதற்கு ஆதரவும் திரட்டி வருகின்றனர்.

பெரும்பரபரப்புக்கு மத்தியில் பேராளர் மாநாடு இடம்பெறுவதாக கட்சிப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(மு-3)

# 31ஆம் நாள் அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 14 - 03 - 1914



மறைவு 08 - 01 - 2001

அமரர்

## தர்மலிங்கம் திருநாவுக்கரசு

(சுந்தரம்பிள்ளை)

*"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ் வுலகு"*

புங்குடுதீவு 3ஆம் வட்டார புரவலரும், முன்னாள் பதுளை வர்த்தகரும், புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய முன்னாள் நிர்வாக உறுப்பினரும் பெருங்காடு மூத்த நயினார்புலம் ஸ்ரீவரசித்தி விநாயகர்ஆலய உப தலைவரும், யாழ்ப்பாணம் கரசன் எலக்றிக்கல்ஸ் நிறுவகருமாகிய அமரர் த.திருநாவுக்கரசு (சுந்தரம்பிள்ளை)அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று நடைபெறுகின்றன. உற்றார்,உறவினர் உட்பட அன்பர்கள் அனைவரும் கலந்து அமரரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போம்.

*மாரியம்மன் கோயில் வீதி,*
*புங்குடுதீவு - 3.*

- குடும்பத்தினர்.

(C/15173)

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

வரவு 03 - 03 - 1931



பிரிவு 03 - 02 - 1996

## திருமதி அன்னலட்சுமி இராசையா

திதி: 07.02.2001

ஒவ்வொன்றாய் ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்ததுவோ
எம்மைப் பிரிந்து நீர் வானுலகம் புகுந்த பின்னர்
ஐந்து அல்ல இன்னும் ஆண்டுகள் நூறு போயினும்
ஓயாதம்மா எம்மனதில் நாளும் உம் நினைவலைகள!

தங்களின் நீங்காத நினைவுகளுடன்
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,
நண்பர்கள்.

*மாத்திரா வளவு,*
*வல்வெட்டி, வல்வெட்டித்துறை.*

(C/15180)

### பூகம்பம் தாக்கிய குஜராத்தில்

# இடிபாடுகளுள் சிக்கிய இருவர் 10நாள்களின் பின்னர் மீட்பு!

புஜ், பெப். 7

குஜராத்தில் பூமியதிர்ச்சி ஏற்பட்ட 10நாள்களின் பின்னர் இடிபாடுகளுக்கிடையில் இருந்து ஆணும் பெண்ணும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

புஜ் நகரில் அடுக்கு மாடிக்கட்டடம் ஒன்றின் அடித்தளத்தில் இவர்கள் வசித்த வீடு அமைந்திருந்தது.

பூமியதிச்சியின்போது அடுக்கு மாடிக் கட்டடம் தகர்ந்து விழுந்தது.

அந்தச் சமயத்தில் இருவரும், அவர்களது வீட்டின் சமயலறையில் இருந்தனர்.

கட்டடம் தகர்ந்து தரைப் பகுதியில் விழுந்து மூடியபோது இவர்கள் சமயலறையில் சிக்கிக் கொண்டனர்.

இதனால் கடந்த 10 நாள்களாக இடிபாடுகளுக்குள் இருந்தபோதும் இருவருக்கும் குடிதண்ணீரும், உணவும் கிடைத்தது.

இடிபாடுகளுக்குள் சிக்கியவர்கள் உயிருடன் இருக்கச் சாத்தியம் இல்லை என்று கருதப்பட்ட நிலையில், இவர்கள் இருவரும் இப்போது உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து,

மீட்கப்பட்ட இவர்களைப் போலவே அதிர்ஷ்டவசமாக இடிபாடுகளுக்குள் சிக்கிய சிலராவது உயிருடன் இருக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதனால் கட்டட இடிபாடுகளை மொத்தமாக அள்ளி அப்புறப்படுத்தாமல் கவனத்துடன் இடிபாடுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

(ஒ-7)

### குஜராத்தின் கஜ் மாவட்டத்தில்

# பூமியதிர்ச்சியின் தாக்கத்தால் நிலத்தடி நீரில் பெரும் பாதிப்பு

புஜ், பெப். 7

குஜராத்தில் பூமியதிர்ச்சியால் மோசமாகப் பாதிப்படைந்துள்ள கஜ் மாவட்டத்தில் நிலத்தடி நீர் நிலைகளில் உள்ள குடிதண்ணீர் அளவுக்கதிகமாக உப்புக்கரிக்கத் தொடங்கியுள்ளது.

அத்துடன் தண்ணீரின் அளவும் குறையத் தொடங்கியதுடன், சில கிணறுகள் முற்றாக வற்றி விட்டன.

நில நடுக்கம் ஏற்பட்டதனால் உணவுப் பஞ்சத்தால் வாடும் கஜ் மாவட்ட கிராமப் பகுதிகள் குடிதண்ணீர் தட்டுப்பாடால் மேலும் மோசமான நிலைமையை அடையக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இதேவேளை, கஜ் மாவட்டதின் வடபுறத்தில உள்ள 'கவுடா' என்ற கிராமத்தில் பூமியதிர்ச்சியினால் தரையில் உண்டாகிய வெடிப்பு ஒன்றிலிருந்து நிலத்தடி நீர் சீறிப் பாய்வதாகவும் கூறப்படுகிறது.

அங்கு தரையிலிருந்து 35 அடிகள் உயரம் வரை தண்ணீர் சீறிப்பாய்வதாகவும்,

இது நல்ல தண்ணீராக இருப்பதால் இப்பகுதியில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை நீங்கியுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஒ-7)

# பலூன் கொங்கை தடை செய்ய ஹொங்ஹொங்குக்கு அழுத்தம்

பலூன் கொங் மதத்துக்குத் தடை விதிக்கும்படி ஹொங் ஹொங் நிர்வாக சபையிடம் சீனா வற்புறுத்தியுள்ளது.

18 மாதங்களுக்கு முன்னர் 'பலூன் கொங்' மத அமைப்பை கொடிய கும்பல் என்று கூறி சீன அரசு தடை செய்தது.

புதிய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றும் இந்த அமைப்பினர் மீது சீன அரசு கடும் அடக்கு முறைகளை ஏவி வருவதாகக் கூறப்படுகிறது.

ஹொங் ஹொங்கை தமது சீன எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தளமாக 'பலூன் கொங்' அமைப்பினர் பயன்படுத்தி வருவதாகவும் அதற்கு ஹொங் ஹொங் நிர்வாகம் அனுமதிக்கக்கூடாது என்றும் சீனா வலியுறுத்தியுள்ளது.

பிரிட்டனின் கட்டுப்பாட்டில் இருந்து ஹொங் ஹொங் சில வருடங்களின் முன்னர் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்ட போதும் அதற்கென தனியான நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

[ஒ-7]

### தி.மு.க. வுடன் உறவை முறித்த

# பா. ம. க. தலைவர் ராமதாஸ் ஜெயலலிதாவுடன் சந்திப்பு!

சென்னை, பெப். 7

இந்தியாவில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து வெளியேறிய பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் நேற்றுக் காலை அ.இ.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசினார்.

காலை 10 மணியளவில் ஜெயலலிதாவின் இல்லத்தில் இப்பேச்சு நடத்தப்பட்டது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ராமதாஸ், தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து பா.ம.க. வெளியேற முதல்வர் கருணாநிதியே காரணம் என்றும் —

தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தல் கூட்டணி தொடர்பாக ஜெயலலிதாவுடன் பேசியதாகவும் தெரிவித்தார்.

பாரதிய ஜனதா தலைமையிலான கூட்டணியில் இருந்து பா.ம.க. விலகியது எதிர்பார்த்த ஒன்றுதான் என்று பாரதிய ஜனதாக் கட்சி கூறியுள்ளது.

தமிழகத்தின் வடமாவட்டங்களிலும், புதுவையிலும் அதிகமாக வாழும் 'வன்னியர்' என்ற மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் டாக்டர் ராமதாஸ் ஆரம்பத்தில் 'வன்னியர் சங்கம்' என்ற அமைப்பை நடத்தி வந்த ராமதாஸ் அரசியலில் ஈடுபடுவதற்காக பாட்டாளி மக்கள் கட்சியை உருவாக்கினார்.

வன்னியர்களிடையே பெரும் ஆதரவைப் பெற்றுள்ள ராமதாஸ், வடமாவட்டங்களில் வெற்றியைத் தீர்மானிக்கக் கூடியவராக உள்ளார்.

இதனைப் பயன்படுத்தி பா.ம.க வுக்கு தேர்தலில் அதிக தொகுதிகளை ஒதுக்கும் கட்சியுடனேயே கூட்டணி வைப்பதாகப் பகிரங்கமாக அறிவித்தவர் டாக்டர் ராமதாஸ்.

இதனால் அவரது பா.ம.க ஒரே கூட்டணியில் தொடர்ந்து அங்கம் வகித்ததில்லை.

கடந்த தேர்தலில் தி.மு.க வுடனும் அதற்கு முந்தைய தேர்தலில் அ.தி.மு.க வுடனும் டாக்டர் ரமதாஸ் கூட்டணி அமைத்திருந்தார். இப்போது மீண்டும் அ.தி.மு.க பக்கம் சென்றுள்ளார்.

தனது மக்களின் நலனே முக்கியம் என்று கூறும் ராமதாஸ்.

இந்தியாவில் எந்தவொரு கட்சிக்கும் நிரந்தரக் கொள்கையே கிடையாது என்றும் அதனாலேயே கட்சிகளுடன் மாறி மாறி கூட்டணி வைப்பது குறித்து கவலைப்படுவதில்லை என்றும் விளக்கமளித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிர ஆதரவாளராகத் தன்னைக் கூறிக்கொள்ளும் ராமதாஸ் சட்டசபை, நாடாளுமன்றம் ஆகியவற்றில் கால் பதிப்பதில்லை என்று சபதமிட்டு இன்று வரை அதனைக் காப்பாற்றி வருகிறார்.

பா.ம.க. வின் நிறுவனத் தலைவர் என்ற பதவியைத் தவிர தேர்தலில் போட்டியிட்டு சட்டசபை, நாடாளுமன்ற உறுப்பினராக முடியும் என்ற போதிலும் ராமதாஸ் அதற்கு உடன்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

### இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில்

# சுரங்கத்துக்குள் சிக்கியவர்களை மீட்கும் முயற்சி தொடர்கின்றது

ராஞ்சி, பெப். 7

இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலம் தன்வார் நிலக்கரிச் சுரங்கத்தில் சிக்கியுள்ள பணியாளர்களை மீட்கும் முயற்சிகள் தொடர்ந்து இடம்பெறுகிறது.

மற்றொரு சுரங்கத்துக்குள் தேங்கி நின்ற வெள்ளம் உடைப்பின் வழியாக இந்த நிலக்கரிச் சுரங்கத்துக்குள் புகுந்ததால் மண் சரிவு ஏற்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட இந்த விபத்தினால் இரு அதிகாரிகள் உட்பட 35 பணியாளர்கள் சுரங்கத்துக்குள் சிக்கியுள்ளனர்.

இவர்களை மீட்க 10 பேர் அடங்கிய குழு முயற்சிகளை மேற்கொண்டது.

அக்குழுவின் முயற்சிகள் பலனளிக்காததால் தற்போது இந்தியக் கடற்படையைச் சேர்ந்த 5 சுழியோடிகள் சுரங்கத்துக்குள் நுழைந்துள்ளனர்.

நிலக்கரிச் சுரங்கத்துக்குள் வெளியேறும் பாதை உட்பட தாழ்வான பகுதிகள் முழுவதும் வெள்ளம் நிறைந்துள்ளது.

ஆனாலும் சுரங்கத்தின் மேல பகுதியில் குடையப்பட்ட பகுதிகள் பல உண்டு. இத்தகைய இடம் ஒன்றில் பணியாளர்கள் தங்கியிருக்கக் கூடும் என்று நம்புவதாக மீட்புப் பணிகளுக்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்தார்.

விபத்து ஏற்பட்ட நாளிலிருந்து 6 நீரிறைக்கும் இயந்திரங்கள் வெள்ள நீரை தொடர்ந்து வெளியேற்றி வருகின்றபோதும் அந்தப் பணி முடிவடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-7)

### உதய அரங்கில்

# ஜப்பானில் ஒத்துழைப்பு மாநாடு

டோக்கியோ, பெப் 7

இயற்கைப் பேரழிவுகளின் போது மறுசீரமைப்புப் பணிகளில் நாடுகளின் ஒத்துழைப்புக் குறித்து உலக அளவிலான மாநாடு ஜப்பானில் நேற்று முன்தினம் தொடங்கியது.

1995 ஆம் ஆண்டு பூமியதிர்ச்சியால் மோசமாகப் பாதிப்படைந்த அகாசிஷிமா தீவில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

# பிரிட்டனிலிருந்து ரத்தம் பெற்ற 11 நாடுகளில் கிருமி அபாயம்

லண்டன், பெப். 7

பிரிட்டனிலிருந்து மனித இரத்தத்தை இறக்குமதி செய்த 11 நாடுகள் மூளைக் காய்ச்சல் குறித்து அச்சம் கொண்டுள்ளன.

இரத்த தானம் செய்த 3 பிரிட்டிஷ்காரர்களின் இரத்தத்தில் மூளைக்காய்ச்சல் அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும்—

ஆனால் அதற்கு முன்னரே அவர்கள் தானம் செய்த இரத்தம் வெளிநாடு ஒன்றுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவிட்டதாகவும்—

'கார்டியன்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

மூளைக்காய்ச்சல் அறிகுறிகள் உள்ள இரத்தம் பெரும்பாலும் சிங்கப்பூருக்கு விற்கப்பட்டிருக்கலாம் என்றும் அப்பத்திரிகை கருத்து வெளியிட்டிருந்தது.

இதனை அடுத்து, பிரிட்டனில் இருந்து மருந்துத் தேவைகளுக்காக மனித இரத்தத்தை வாங்கும் சிங்கப்பூர் உட்பட 11 நாடுகள் மூளைக் காய்ச்சல் கிருமிகளைக் கொண்ட இரத்தத்தைத் தேடிக் கண்டு பிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

### 6 பேர் உயிரிழந்ததையடுத்து

# காஷ்மீரில் இஸ்லாமியரை சீக்கியர் தாக்கும் அபாயம்!

காஷ்மீரில் சிக்கியவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையே வன்முறை மோதல்கள் ஏற்படும் அபாயம் எழுந்துள்ளது

கடந்த சனிக்கிழமை ஸ்ரீநகரில் தீவிரவாதிகள் கண்மூடித்தனமாகச் சுட்டதில் 6 சீக்கியர்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தால் அங்கு நிலவிய பதற்றத்தைத் தணிப்பதற்காக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஸ்ரீநகர்ப் படுகொலைகளைக்கண்டித்து நூற்றுக்கணக்கான சீக்கியர்கள் மார்வால் என்ற இடத்தில் நேற்று முன்தினம் ஊரடங்கு உத்தரவை மீறி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் உணர்ச்சி வசப்பட்டு வன்முறைகளில் ஈடுபடும் சூழ்நிலை உருவானதாகவும்-

இதனால் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார். 35 பேர் காயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து ஸ்ரீநகரில் சீக்கியர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே இன மோதல்கள் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

இராணுவத்தின் துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை நடத்தப்படுவதாகவும்,

சீக்கிய இளைஞர்கள் ஆத்திரத்தைக் கைவிட்டு அமைதி காக்கும்படியும், மாநில அரசு வேண்டுகோள்விடுத்துள்ளது.

காஷ்மீர்ப் பிரச்சினையில் இந்திய அரசு மேற்கொண்டுள்ள அமைதி முயற்சிகளைச் சீர் குலைப்பதற்காகவே சீக்கியர்கள் மீது தாக்குதல் நடத்தி இனமோதல்களை உருவாக்க தீவிரவாதிகள் முயற்சிப்பதாகக் கருதப்படுகிறது

(ஒ—7)

# லிபியா மீதான தடையை நீக்கக் கோரிக்கை

லிபியா மீதான தடைகளை நீக்க நடவடிக்கை எடுக்கும்படி ஆபிரிக்க ஐக்கிய அமைப்பின் பொதுச் செயலாளர் சலீம் ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் கோரியுள்ளார்.

'லொக்கர்பீ' விமானக் குண்டு வெடிப்பு வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை ஒப்படைக்காததற்காக லிபியா மீது விதித்த தடைகளை, அவ் வழக்கு முடிவடைந்த பின்னரும் நீக்காதிருப்பது நியாயமல்ல என்றும் சலீம் தெரிவித்தார்.

# இந்தியா மீது முறைப்பாடு

பாகிஸ்தானின் அமைதி முன் முயற்சிகளை ஏற்றுப் பயன்படுத்துவதை இந்தியா மிகவும் தாமதப்படுத்துவதாக பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வேஸ் முஷாரப் குறை கூறியுள்ளார்.

இதனை மறுத்துள்ள இந்தியா எல்லைக்கப்பால் இருந்து பயங்கர வாதத்தை ஏவி விடுவதை பாகிஸ்தான் முற்றாக நிறுத்தினால் மட்டுமே, அதனுடன் பேச்சு நடத்த முடியும் என்று கூறியுள்ளது.

(ஒ)

உ

யாழ்/கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கை

## வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

நூதன உற்சவ மூர்த்தி பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேகம்

08-02-2001 வியாழன் காலை 8 மணி 01 நிமிடம் தொடங்கி 9 மணி 23 நிமிடம் வரையிலான சுப வேளையில் பிரதிஷ்டாபிஷேகம்.

07-02-2001 மாலை 4-00 மணிக்கு பின்னர் கிரியாரம்பம் 5-30 மணிக்கு சுவாமிக்கு அடியார்கள் பாலறுகு சாத்துதல்.

பிரதிஷ்டா பிரதமகுரு:-
சிவாச்சார்ய சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள்

கும்பாபிஷேகம் சிறப்புறவும் அருள் கிடைக்கவும் பிரார்த்திப்பவர்கள்

**அபிராமி தொலைத் தொடர்பகம்**
195, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 021-2840
(83860)

## இடமாற்றம்

### ஜெய லக்ஸ்மி ஜுவலறி கட்டிங் வேக்ஸ் ஸ்தாபனம்

சாவகச்சேரி பஸ் நிலையம் முன்பாக இயங்கி வந்த மேற்படி ஸ்தாபனம் தற்போது

**புளியடிச் சந்தி, வட்டு. வடக்கு சித்தன்கேணி**

என்னும் இடத்தில் 07 - 02 - 2001 முதல் புதுப்பொலிவுடன் வாடிக்கையாளரின் நன்மை கருதி திறந்து வைக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

ஆறு. இராசபாலு
(R. A. R. பாலன்)
உரிமையாளர்

பிளாக் றோட்,
சங்கானை.
(83871)

## இந்து மன்றம் யாழ். பல்கலைக்கழகம்

## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றத்தின் 1998/1999 கல்வியாண்டுக்குரிய நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் புகைப்படம் எடுக்கவேண்டியிருப்பதனால் 09 — 02 — 2001 வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு ஸ்ரீபரமேஸ்வரன் ஆலயத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.


குறிப்பு-: 1998/1999 -கல்வியாண்டில் இறுதிப்பரீட்சையை முடித்து வெளியேறிய நிர்வாகசபை உறுப்பினர்கள் இவ்வறிவித்தலைக் கவனத்தில் கொள்ளவும்.

இந்து மன்றம்
யாழ். பல்கலைக்கழகம்
(83866)

## நீங்காத நினைவுகளில் இரண்டு ஆண்டுகள்

தோற்றம்: 24 — 04 — 1933

மறைவு: 30 — 01 — 1999



### அமரர் இளையதம்பி தர்மராசா

அன்போடு எங்களை அரவணைத்து பாசத்தின்
குலவிளக்காய் காத்து வளர்த்த தந்தையே!
நீங்கள் மறைந்து ஆண்டு இரண்டானாலும்
உங்கள் நினைவலைகள் எம்மை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

மணற் பகுதி, புத்தூர்.
(83864)

## படையினர் தேடுதல்

அரியாலை, பெப். 7

ஈச்சமோட்டை, பாஷையூர், கொய்யாத்தோட்டம் ஆகிய பகுதிகள் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்து

இராணுவத்தினர் வீடு விடாக சென்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவது தெரிந்ததே. (ஜ-17)

## முழு நிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்னாள் அதிபர் க. சி. குகதாசன் தலைமையில் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

''செலாவணி நெருக்கடியும் நிகழ் காலப் பிரச்சினையும்'' என்னும் தலைப்பில் யாழ், பல்கலைக்கழக பொருளியற்துறைத் தலைவர் க. சிவநாதன், ஸ்ரான்லிக் கல்லூரியின் பொருளியல் ஆசிரியர் வே. கருணாகரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (க-10)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, பெப். 7

பொலிகண்டி உப்புக்கிணற்றடி சித்தி விநாயகர் கோயில் பாலஸ்தாபனம் இன்று புதனகிழமை நடைபெறும்.

* * *

அரியாலை, பெப். 7

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் மணவாளக் கோலத் திருவிழா இன்று புதன்கிழமை விசேட சங்காபிஷேகத்துடன் நடைபெறும்.

பிற்பகல் 4 மணிக்கு சுவாமி மஞ்சரதத்தில் வீதியுலா வருவார். (ஜ-17)

## கந்தபுராணப் படிப்பு

திருநெல்வேலி அருள்மிகு தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு கந்தபுராணப் படிப்பு ஆரம்பமாகிறது.

ஓய்வு பெற்ற ஆசிரியை செல்வி சபாபதிதங்கபொன் தலைமையில் புராணப் படிப்பு தினமும் பிற்பகலில் இடம்பெறும்.

(ஜ-7)

## அதிபர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 7

கைதடி, நாவற்குழிப் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலைகளை நாளை வியாழக்கிழமை பார்வையிட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அங்கு செல்ல வசதியாகப் பாடசாலை அதிபர்களை நாளை காலை 8 மணிக்குக் கோப்பாய்ச் சந்திக்கு வருமாறு கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப. செல்லத்துரை கேட்டுள்ளார். (ஜ-3)

## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி.

**A/L 2002**

புதிய பிரிவு

ஆரம்பம்;

07—02—2001
பிற்பகல் 4.00 மணி

அனைவரியல்
S.S மனோகரன்
(83584)

வந்துவிட்டது...

**L Q 300 Dot Metrix Printer**

## SRI MURUGAN COMPUTER SYSTEMS

**303, K. K. S. Road, Jaffna.**

(சி/15192)

## கண்ணீர் அஞ்சலி

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி கருணாகரன் கலைச்செல்வி

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்து எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

புதிய கஜீவன் நகைமாடம்

கே. கே. எஸ் வீதி,
இணுவில்.
(சி/15201)

## மரண அறிவித்தல்கள்

### நாகர் கதிரவேலு (விசுவப்பா)

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் கதிரவேலு அவர்கள் 04-02-2001 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07-02-2001) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நவாலி கொத்துக்கட்டி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
க. ரட்ணம்
(மகன் - பொறியியலாளர்)

C.P.M. லேன்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.
(சி/15209)

### திருமதி கருணாகரன் கலைச்செல்வி

இணுவில் கிழக்கு வங்கியடியைச் சேர்ந்த திருமதி கருணாகரன் கலைச்செல்வி நேற்று (6 - 2 - 2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் சுப்பிரமணியம் - சரோஜினிதேவியின் அன்பு மகளும் கருணாகரனின் பாசமிகு மனைவியும் தயாபரன் (சுவிஸ்), அருந்ததி (சுவிஸ்), குருபரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செந்தூரன் கார்த்திகா, கஜனி, கஸ்தூரி, கார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசையா, சிவபாக்கியம் ஆகியோரின் மருமகளும் கலாராணி, கலாரஞ்சினி கலாநிதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று பிற்பகல் 2-30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
இ. கருணாகரன்
(கணவர்)

இணுவில் கிழக்கு,
வங்கியடி,
இணுவில்.
(83877)

### திருமதி விசாலாட்சி இராமலிங்கம்

சரவணை மேற்கை பிறப்பிடமாகவும் செட்டித்தெரு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி இராமலிங்கம் நேற்று(6-2-2002) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியாரும், சுந்தரமூர்த்தி (இளைப்பாறிய பணிப்பாளர், சுங்கத் திணைக்களம்), திருமதி கௌரி, திருமதி மனோன்மணி, திருமதி சௌபாக்கியகௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி சந்திரலீலா, சுந்தரமூர்த்தி, நா. இராமச்சந்திரன், பொ. பரராஜசிங்கம் இ மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஞானகௌரி, தர்ஷினி, ஜனார்த்தன், நிர்மலன், நிஷாந்தன், சுபோதினி, காலஞ்சென்ற ஜயதீபன் மற்றும் சுபணா, ஆகாசந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்ற நா. சின்னையாபிள்ளையின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. சுந்தரமூர்த்தி
(மகன்)
(Rtd. D. D. Customs Officer)

இல. 63, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.
(83878)

# அன்பர்கள் ஆனந்தமுற ஆண்டவன் திருநடனம் புரிந்த தைப்பூசத் திருநாள்

பூசம் அல்லது புஷ்பம் என்பது 27 நட்சத்திரங்களில் எட்டாவதாகும். தைமாதத்தில் வரும் பூச நட்சத்திர நாள் புண்ணிய நாளாக இந்துக்களால் கொண்டாடப்படுகிறது. தைப்பூசநாள் நிறைமதி நாளாகவே பெரும்பாலுமிருக்கும்.

''நெய்ப்பூசம் ஒண்புழுக்கல்
நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே
போதியோ பூம்பாவாய்''

— என்பது சம்பந்தர், எலும்புக்கூடாய்க் குடத்தில் கிடந்த பூம்பாவை என்னும் மடந்தையை உயிர் பெற்றெழச் செய்ய திருமயிலாப்பூர் கபாலீஸ்வரப் பெருமானிடத்தில் விண்ணப்பித்துக் கொண்ட பாடல் வரிகளாகும். இதனால் சம்பந்தர் காலத்திலேயே தைப்பூசத்திருநாள் கொண்டாடப்பட்டதை அறியமுடிகிறது.

ஆசாரசீலர் வாழ்வில் இது அபரிமிதமான பெருவிழாவாகும். இதன் காரணமாகப் புராண வரலாறுகளுமுண்டு. நாவலர் பெருமானின் கூற்றுப்படி ''தைப்பூசம் வியாழக்கிழமையில் சித்தயோகம் கூடிய பௌர்ணமித்தினமெனில் இன்னிசை வீணையர்யாழினர் ஒரு பால் இருக்கொடு தோத்திரம் இயம்ப, குழலொலி, யாழொலி, கூத்தொலி ஏற்றம் பெறத் தில்லை, நடராசன் திருநடனக்காட்சியை மாட்சியுடன் மனதில் நிறுத்தி வழிபட வாய்ப்புண்டு'' எனும் கருத்தை வலியுறுத்தியுள்ளார்கள்.

இதற்குக் காரணம் என்னவெனில், முன்னொரு காலத்தில் சிவனும் திருமாலும் லீலை புரிய விரும்பி முறையே பிட்சாடனக் கோலத்துடனும், மோகினி வடிவத்துடனும் வாலைப் பருவத்தினராகித் தாருகா வனத்தில் உடுக்கு ஓசையெழும்ப இறைவன் ஆலசபேலிட்டினால் பலவித நடனங்கள் ஆடினாரென்றும் பூதகணங்கள் அணி செய் கலைஞர்களாகப் பாடினார்களென்றும் கூறப்பட்டுள்ளது. இத்திருக் கூத்தின் சிறப்பைத் திருமால் பதஞ்சலி முனிவருக்குக் கூறினார். பதஞ்சலி முனிவர் தானும் அத்திருநடனத்தைக் காணவேண்டுமென்ற நோக்குடன் கடுந்தவமியற்றினார். பெருமான் பதஞ்சலி முன் தோன்றி ''அப்பனே இக் காட்சியைக் காணவே வியாக்கிரபாதரென்னும் புலிக்கால்முனிவரும் தவத்திலிருக்கிறார். நீவிர் இருவரும் தில்லைக்கு வந்து தொல்லை வினை அகல அற்புத திருநடனத்தைத் அங்கே காணலாம்'' என்று திருவாய் மலர்ந்தார். அதற்கிணங்க இரண்டு முனிவர்களும் தில்லையை அடைந்து, பிரமா, திருமால் முதலிய தேவர்கள் மற்றும் தில்லை மூவாயிரவரும் பிறரும் சூழ நடராஜருடைய ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்துக் காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்கிச் சிவானந்த அனுபவத்தில் மூழ்கினார்கள்.

இவ்வாறு ஆண்டவன் அன்பர்களுக்காகத் திருநடனம் புரிந்த தினமே தைப்பூசத் திருநாளென்பர். இத் திருநாளன்று சிவன், முருகன் முதலிய அனைத்து ஆலயங்களிலும் அபிஷேக ஆராதனைகள் அன்று தொட்டு இன்றுவரை சிறப்பாக நடந்து வருகின்றன. அடியார்கள் இத் தினத்தில் விரதம் அனுஷ்டித்து ஆலயம் சென்று வந்து ஆகாரம் உண்ணுதல் வழக்கமாகும்.

தேவர்களின் குருவாகிய வியாழபகவான் (பிருகஸ்பதி) பூச நட்சத்திரத்தின் தேவதை என்பர். வியாழபகவானே அறிவின் தேவதையாகவும் இருப்பதாக இந்துக்கள் நம்புகின்றனர். எனவே பூசநட்சத்திரத்தைப் பூசித்தால் வியாழபகவானின் அருள் கிடைக்கும். இந்நாளில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதும் நல்ல பலனைத் தரும். தமிழ் நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருவிடைமருதூர் தைப்பூச விழாவிற்குப் பிரசித்திபெற்ற தலமாகும். அக் கோயிலுள்ள சித்த தீர்த்தத்தில் மூழ்குவதும், வில்வமரத்தைச் சுற்றிவருவதும், சுவாமி தரிசனம் செய்வதும் பாவங்களைப் போக்கும் என்று சொல்வர்

இத் தினத்திலே உழவர் பெருமக்கள் தம் உயிர் போல் காத்து வளர்த்த நெற்பயிர்களின் முற்றிய கதிர்களைப் புதிதாகப் புதிர் எடுத்து அதிவிருந்து அரிசியைப் பிரித்துப் புதுக்கலத்தில் இட்டு வழிபாட்டுடன் பொங்கிப் படைத்துப் புதிதுண்பர். இந்த மங்கள நாளிலே குழந்தைகளுக்குப் பாற்சோறு ஊட்டல், திருமாங்கல்ய தாரணம், பொன்னுருக்கல், வித்தியாரம்பம், புது வியாபார ஆரம்பம், புதுப்பயிர் நடுதல், காதுகுத்தல் போன்ற நற்கருமங்களைத் தமிழ் மக்கள் செய்வது வழக்கமாகும்.

எனவே இந்த நடைமுறைகள் கால மாறுபாடுகளாலும், கண்மூடி வழக்கங்களாலும் அழிந்துபோகாமலிருப்பதற்காக அவற்றைச் சிக்கெனக் கடைப்பிடித்து எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளிப்போமாக! ★

நாக. சண்முகநாதபிள்ளை

## நிதி உதவி

வடமராட்சிப் பகுதியில் உள்ள 12 நலன்புரி நிலையங்களில் வசிக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கு இலவச மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக 25 ஆயிரம் ரூபா நிதி உதவியை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளை உபதலைவர் தவத்திரு. ஆத்மகனானந்தர் மகராஜ் வடமராட்சி ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்கென சுவாமி ஆத்மகனானந்தர் மகராஜ் ஏற்கனவே ஒன்றரை லட்சம் ரூபா நிதியை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது


# கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
உடுவில் உப அலுவலக
வருமான மேற்பார்வையாளர்

திரு. த. நாகேந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி தம்பிப்பிள்ளை சின்னத்தங்கச்சி

அவர்கள் 05 - 02 - 2001 இல் காலமாகிவிட்டார். அவரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொறுப்பதிகாரியும்
சக உத்தியோகத்தரும், ஊழியர்களும்.

வலி. தெற்கு பிரதேச சபை,
உடுவில் உப அலுவலகம்,
உடுவில். (83835)


# கோப்பாய்ப் பிரதேச செயலர் பகுதியில் வீடுகளை இழந்த 244 பேருக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்தகால யுத்த அனர்த்தங்களின் போது வீடுகளை இழந்த 244 பேருக்கு முதற்கட்டமாக வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபாவுக்குரிய காசோலைகள் கிடைத்துள்ளதாக பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உரும்பிராய் மேற்கு கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட 119 பேருக்கும், ஊரெழு கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட 49 பேருக்கும், புத்தூர் மேற்குகிராமஅலுவலகர் பிரிவுக்குட்பட்ட 76 பேருக்குமே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது

தங்கள் பகுதி கிராம உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை உறுதிப்படுத்தி அனுமதிக் கடிதங்களைப் பெற்று வங்கியில் காசோலையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [க-72]

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப் 7

யாழ். கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கை வேம்படி சித்தி விநாயகர் ஆலய நூதன உற்சவ மூர்த்தி பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும்:

இன்று புதன்கிழமை தைப்பூசமன்று மாலை 4மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகும். தொடர்ந்து நூதன மூர்த்தி அதிவாசக் கிரியைகள். பாலறுகு சாத்துதல் இடம்பெறும்.


# புனித லூர்து அன்னை ஆலயத் திருவிழா

பேரயிட்டி (இளவாலை)

8-2-2001 வியாழன் மாலை 5 30 மணி } திருச்செபமாலையுடன்
9-2 2001 வெள்ளி மாலை 5 30 மணி } நவநாள் திருப்பலி

10-2-2001 சனி மாலை 5.00 மணி - திருச்செபமாலை, திருப்பலி, நற்கருணைஆராதனை, நற்கருணை ஆசீர் இடம்பெறும்.

11-2-2001 ஞாயிறு காலை 7மணி- திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும், சொரூப ஆசீரும் இடம்பெறும்.

பங்குத்தந்தையும்,
பங்கு மக்களும்.

(சி/15186)



# மானிப்பாய் சுகாதார, சமூக சுற்றாடல், விவகார சபையின் கீழ்

இயங்கிவரும்

# மானிப்பாய் மெடிக் கிளினிக்

''திருத்தணிகை'',
யாழ். வீதி, மானிப்பாய்.

ஒரு வருடம் பூர்த்தியாகும் (07—02—2001) இச்சமயத்தில் எம்மை ஆதரித்து, இடையறா வளர்ச்சிக்கு உதவிய சகலருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எமக்கு ஆதரவு தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

எமது கிளினிக்கில்;-

★ விசேட மருத்துவ சிகிச்சை — செவ்வாய் (மாலை 4.00 மணி)
★ விசேட மகப்பேற்று பெண் நோயியல் சிகிச்சை — சனி (பகல் 12. 30 மணி)
★ பல் வைத்தியம் — திங்கள், புதன், சனி (காலை 9.00 மணி)
★ பல் கட்டுதல், கிளிப்போடல் — தினசரி (காலை 9.00 மணி)
★ ஆய்வுகூடப் பரிசோதனை — திங்கள், செவ்வாய், புதன், சனி, ஞாயிறு (மாலை 3 00 மணி)
★ விசேட ஆய்வுகள் — புதன் (காலை 6.00—8.00 மணி)
★ E C G — செவ்வாய் (மாலை 4 30 மணி)
★ கண் பரிசோதனை — திங்கள், புதன், வெள்ளி (மாலை 4.30 மணி)

மேற்குறிப்பிட்ட சிகிச்சை தவிர:-

தினமும் காலை 9.30-12.30 வரையும், மாலை 3.30- 6.30 வரையும் வெளிநோயாளர் சிகிச்சைகள் இடம்பெறும். எம்மிடம் ஆங்கில மருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்
சுகாதார சமூக சுற்றாடல், விவகார சபை, மானிப்பாய்.

தலைவர்
மெடிக் கிளினிக்,

விளம்பர அனுசரணை:

றெனி கண்ணாடி அகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Dr. து. குலசிங்கம் பல்தொழில் நுட்ப சேவை, மானி. மெடிக கிளினிக், மானிப்பாய்.

(சி/15184)



உ
சிவமயம்

# திறப்பு விழா அழைப்பு

# ஜதுஷன் வீடியோ சென்ரர்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் தைமாதம் 25 ஆம் நாள் இன்று (07 - 02 - 2001) புதன்கிழமை முற்பகல் 8-00 - 10-28 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்,

## ஜதுஷன் வீடியோ சென்ரர்

என்னும் நிலையத்தை ஆரம்பித்து நடத்துவதற்கு இறைவன் திருவருள் கூடியுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து சிறப்பித்து மேன்மேலும் நிலையம் வளர்ச்சியடைவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
கு. சுதாகர்
(கண்ணன்)

சிவன் வடக்கு வீதி,
பருத்தித்துறை.

(சி-15099)

# கண்ணீர் அஞ்சலி

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவர்
திரு. சி. செகராசசிங்கத்தின்
இளைய மகனான

## செ. குணசிங்கம்

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்.

இ. ஸ்ரீதரன் (மைத்துனர்) ''ஸ்ரீராம்'' மந்திகை.

க. இராஜதுரை (மாமனார்) ''ராஜி பாதணி'' பருத்தித்துறை.

(83825)


# ஆய்வு முறையியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க தூய விஞ்ஞானப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆய்வு முறையியல் கருத்தரங்குத் தொடரின் ஆறாவது நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை 3.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் ''இளம் ஆய்வாளர்களின் ஆற்றல்களும் பிரச்சினைகளும்'' என்ற விடயம் பற்றி கருத்துரை வழங்குவார். (க)

# இளவாலை ஹென்றீஸ் கட்டட பூர்த்திக்கு ரூ. 25 லட்சம் தேவை

இளவாலை புனித ஹென்றியரசர் (சென். ஹென்றீஸ்) கல்லூரிக்கு கடந்த 1990 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கட்டடம் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

இந்த மாடிக் கட்டடத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கல்லூரி நிர்வாகம் வடக்கு மாகாண அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

157 அடி நீளமும், 25 அடி அகலமும் கொண்ட இந்த மாடிக் கட்டடத்தைப் பூர்த்தி செய்வதற்கு 25 லட்சம் ரூபா தேவைப்படுவதாக கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.


கணபதி துணை நிற்க



# புதிய கடைத் திறப்புவிழா

## ரட்ணா பலசரக்கு மாளிகை

ஸ்ரீ விக்கிரம வருஷம் தை மாதம் 25 ஆம் நாள் புதன் (ஆங்கிலத் திகதி 07–02–2001) காலை 8 59 தொடக்கம் 9 29 வரையும் (பழைய நேரம்) மீனம் இலக்கினத்திலும் பூசம் நட்சத்திரத்திலும் சித்த யோகத்திலும் கூடும் சுபமுகூர்த்த வேளையில்,

## ரட்ணா பலசரக்கு மாளிகை

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது; அத்தருணம் அன்பர்கள்' நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து ஆசி தந்தருளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

கு. செல்வராசா (உரிமையாளர்).

ரட்ணா பலசரக்கு மாளிகை
718, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (83751)


# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்

இதன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள், யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரும். யாழ். வலயக் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் 2001 - 02 - 08 ஆம் திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினமே மு. ப 10 30 மணிக்குத் திறக்கப்படும். அச் சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலைப் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/ யாழ். மத்திய கல்லூரி நூலகம், வகுப்பறைகளுக்கான திருத்த வேலைகள். (மேல்மாடி) 160'X28' | 500/- | 4000/- |

1. மேற்படி வேலை இக்ராட் (ஐசிரிஎடி) நிறுவனத்தின் தரம் 09 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.

2. கேள்விப் பத்திரங்களில் பொருள்கள சேவை வரி (ஜீஎஸ்ரி) சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பொருள்கள் சேவை வரி (ஜிஎஸ்ரி) சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

3. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப் பணத்தை யாழ்ப்பாண வலயக் கல்வித் திணைக்களத்தில் வலயக் கல்விப்பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 2001 - 02 - 15 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை யாழ். வலயக் கல்வித் திணைக்களப் பாடசாலைக் கட்டட வேலைகள் கிளையில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப் பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டுக் கடித உறைகளின் இடதுபக்க மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு ''தலைவர், கேள்விச்சபை, யாழ். வலயக் கல்வித்திணைக்களம், செம்மணி வீதி, யாழ்ப்பாணம்'' என விலாசமிடப்பட்டு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளரின் அலுவலக அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப்பெட்டியில் 2001 – 02 - 23 ஆம்திகதி முற்பகல் 10 00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

05. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து மூன்று மாத காலத்துள்ளே வேலைகளைப் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. மேலும் சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் கேள்விப்பத்திரம் பெறப் பணம் செலுத்தும் போது பொ. சே. வரிப் பதிவிலக்க சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

06 கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறியத்தருகின்றேன்.

திருமதி செ. மகாலிங்கம்,
வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

பாடசாலை கட்டட வேலைகள் கிளை,
வலயக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
2001 - 02 - 05 (சி/15171)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## தாமோதரம்பிள்ளை தனபாலசிங்கம்

[கிராம சேவை அலுவலர்]

மலர்வு 1951–02–13 உதிர்வு 1999–01–31

பாசத்தின் சுமையோடு பறந்து சென்ற அப்பாவே!
இரு விழி சிந்திய நீர்த்துளி இன்றும் காயவில்லை அப்பாவே!

அதற்குள்ளா! — ஈராண்டு ஆனதப்பா!
விழி எல்லாம் நீர்தேங்கி விம்மலும் விக்கலும்
விடையாகி விட்டதே அப்பா!

மனைவி, பிள்ளைகள்.

3 ஆம் கட்டை,
வட்டக்குளத்தடி,
கட்டப்பிராய். [83824]

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி நாகம்மா சின்னையா

மண் மகிழ 02-03-1913 கண் நெகிழ 11-02-1998

திதி: தைப் பூரணை

அன்பின் உறைவிடமே! அணையா ஒளிவிளக்கே!
நிழலற்ற மரமாகி ஆண்டு மூன்று ஆனதம்மா!
ஆறுமோ எம் துயர் ஆண்டு பல ஆனாலும்,
ஆயிரம் உறவு இருந்தென்ன...?
''அம்மா'' என்பதற்கு இணையாகுமா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தன் அருள் வேண்டி கைகூப்பி நிற்கின்றோம்.

மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

29/1, செட்டித்தெரு லேன்,
நல்லூர். (83786)

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 23 - 06 - 1925

ஆண்டவன் அடியில் 05 - 02 - 1993

அமரர்

## வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர்

(மாயவர்)

திதி: 07.02.2001

ஐயா!

மலர்ந்த முகத்துடனும் மாசற்ற நெஞ்சுடனும்
நேசத்தால் எமை வசமாக்கி
மங்காத புகழோடு மாநிலத்தில் வாழ்ந்தீர்
நிலையற்றது இப்பிறவி என்றெண்ணி
நிமலன் கழலடைந்தீரோ!
நினைவெல்லாம் உம் வதனம்
நித்தமும் தோன்றிடுமே
மறப்போமா உம் நினைவை.

உங்கள் நினைவில் வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*காளிகோயிலடி,*
*மல்லாகம்.* (C/15187)


# J.T.I. இன் புலமைப் பரிசில் 2001

மேற்படி புலமைப்பரிசில் மூலம் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் தமது பதிவுகளை 09-02-2001 இற்கு முன்னர் செய்து கொள்ளவும்

**புதிய பயிற்சிகள் ஆரம்பம்:**

10-02-2001 (சனி,ஞாயிறு நாள்களில்)
14-02-2001 (கிழமை நாள்களில்)

குறிப்பு:- புலமைப்பரிசிலில் இணையத் தவறியவர்கள் இப்பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இவர்களுக்கு கட்டணத்தில் இருந்து 25% கழிவு வழங்கப்படும்.

A/L 2001 க்கு பின்னர் பயிற்சி நெறிகளை தொடர இருக்கும் பரீட்சார்த்திகள் தமது பதிவுகளை 09-02-2001க்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**
**No.7, Palaly Road, Jaffna**
(இலுப்பையடிச் சந்தி அருகில்)
(C/15167) - DIRECTOR.


# அந்தியேட்டி அழைப்பு

[திகதி - இடம்மாற்றம்]



## நவசிவாயம் சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஊழியர், யாழ்.மாநகரசபை)

அரியாலை சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த நவசிவாயம் சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியையும் மதிய போசன உபசாரமும் தற்காலிக முகவரி இல. 56, கே. கே. எஸ். வீதி, கொக்குவிலில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அரியாலையில் உள்ள எமது சொந்த இடத்தில் மீளக் குடியேறி இருப்பதால் 41ஆம் நாள் (17-02-2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் என அறியத் தருகின்றோம்.

விலாசம்:
*90, சுப்பிரமணியம் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (83876)

தகவல்:
N.S.ரவீந்திரன் (மகன்)
(இலங்கை மின்சாரசபை - மேகாஸ் வீடியோ, அரியாலை)

## வன்னியைச் சேர்ந்த ஏழு பேர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.7

கைதடிப் பகுதியில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்ட 7 பேர் மட்டுமே தற்போது காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நேற்று அங்கு சென்றுவந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் வயாவிளான் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் கடந்த 4 ஆம் திகதி காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்களின் பெயர்கள் வருமாறு:-

- நல்லதம்பி கேதீஸ்வரன்,
- கந்தசாமி யோகேஸ்வரன்,
- பாலசுந்தரம் கோபாலகிருஷ்ணன்,
- இரத்தினம் ராஜா,
- கிருஷ்ணபிள்ளை ஆனந்தரூபன்,
- தம்பையா தயாபரன்,
- இரத்தினம் ராஜகிளி போகலன் தங்கராஜ்.

இவர்கள் அனைவரும் வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். (ஐ-10-ரி)

## தொடர்ந்து விளக்க மறியல்

மிருசுவில் ஒட்டுவெளி வாய்க்காலில் சடலமாக மீட்கப்பட்ட சிப்பாயின் மரணம் தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு சிப்பாய்களும் நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை பெப்ரவரி 19 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-117)

## புலிகள் தரப்பில் இருவர் உயிரிழப்பு

வவுனியா,பெப்.7

எழுதுமட்டுவாழ பகுதியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

- யாழவன் அல்லது யாழினி (ஆனந்தசிங்கம் சசிரேகா - யாழ்ப்பாணம்.)
- வெண்ணிலவன் (சவரிமுத்து அல்வின் ராஜ் - யாழ்ப்பாணம்.)

## கல்வியங்காட்டில் இளைஞன் கைது

கல்வியங்காட்டுச் சந்தியில் வைத்து இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அவரின் உறவினரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த அருமைத்துரை விமலதாஸ் (வயது20) என்பவரே கடந்த2ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு 51 ஆவது படையணி இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.

இவரது கைது தொடர்பாக 'ரிசீற்' வழங்கப்பட்டுள்ளது. (ஐ-10-ரி)


**SUBRA (14)**
சித்தன்கேணி
2001 A/L
நாடகம்
A.C.பிரான்சிஸ்
(Mon., Tue., Thu., Fri., Sun.)
6.15 - 7.15 a.m
புவியியல்
S.ஜங்கரன்
(Mon., Tue., Wed., Thu., Fri.)
6.30 - 7.30 a.m
(83716)



யாழ்.நகரில்

# சந்தியா மல்ரிகோட்யாட்

# புதுக்கடை திறப்பு விழா

இன்று (2001-02-07) புதன்கிழமை காலை 11.24 தொடக்கம் காலை 11.57 வரையுள்ள சுப முகூர்த்த வேளையில், இலக்கம் 2, பெரியகடை வீதி, யாழ்ப்பாணத்தில் திறக்க வுள்ளோம்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இல.2, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (83873)

உரிமையாளர்:
சந்தியா மல்ரிகோட்யாட்


# SERVICE OF REMEMBRANCE AND THANKSGIVING

A Service of Remembrance and thanksgiving for the life and work of

**MISSES E.M DEVA & L.P. DEVA**

*(Retired vice Principals, Chundikuli Girls' College)*

**Will be held on saturday, 10th February 2001, at 4.00 p.m. at St.John the Baptist's Church Chundikuli.**

**The Presence and prayers of Old Girls, Parents and Friends will be greatly appreciated on this occasion.**

**PRINCIPAL, STAFF & STUDENTS**
**CHUNDIKULI GIRLS' COLLEGE**
**JAFFNA.**
(C/15197)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 28.01.1943

ஆண்டவன் அடியில் 07.02.1995

## அமரர் பொ.தில்லைநாதன்

அன்பின் திருவுருவாய் ஆசையோடெம்மை ஆளாக்கி - நாம் இன்பமாய் வாழ்வதற்கு ஈடிணையற்று உழைத்த செல்வரே - நாம் உலகினில் மனிதராய் உலாவிட ஊக்கமளித்த எம் தந்தையே என்றும் உங்கள் நினைவுகளில் ஏங்கித் தவிக்கின்றோம்.

*நிரந்தர முகவரி:*
*கல்வயல்,*
*சாவகச்சேரி.*

*தற்காலிக முகவரி:*
*பருத்திக்கலட்டி,*
*சுன்னாகம்.* (83831)

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்

## த.கந்தையா

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகக் கொண்டவரும், கதுமலை எச்சாட்டி வைரவர் கோயில் பூசகருமாகிய த.கந்தையா ஐயா அவர்கள் நேற்று (06.02.2001) அவரது இல்லத்தில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரது சமாதிக்கிரியை இன்று (07.02.2001) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு தாவடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் தெற்கு,*
*இணுவில்.* (83874)

தகவல்:
க.சபா ஐயா
(மகன்)

## திருமதி இரத்தினபூபதி பரராஜசிங்கம

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி இரத்தினபூபதி பரராஜசிங்கம் நேற்று (6.2.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா- பராசக்தி தம்பதிகளின் ஏகபுதல்வியும் இராசாத்தி, குணபாலசிங்கம், காலஞ்சென்ற சத்தியபாமா மற்றும் பத்மினிதேவி, விஜயலக்சுமி, உதயலக்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற செல்லையா [illegible]வரத்தினம் (குமாரு) அவர்களின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7.2.2001) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பகல் 12 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயனார் கோயிலடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (83873)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
ஐ.காலிங்கநடனம்


MOBILE NET MCS COMPUTER SERVICES

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

# இணைய மொழி ஜாவா

நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.
புதிய பிரிவு ஆரம்பம்:
09.02.2001 காலை 7.45 செவ், வியா., வெள்ளி காலை 7.45-8.45
(C/15194)

## மல்லாவியில் எழுச்சி நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரால் அண்மையில் நடத்தப்பட்ட 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தினர் நேற்று மல்லாவியில் எழுச்சி ஊர்வலம் ஒன்றையும் பொதுக் கூட்டத்தையும் நடத்தினர்.

(ஐ-7-164)

## ஸ்ரீலங்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்க்கட்சிகள் சார்பில் கலந்து கொண்ட யாழ்.மேயர் என்ரவிராஜ், ஜப்பானியத் தூதர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அறியவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டுவருவதற்காக இலங்கை அரசை ஜப்பான் ஊக்குவித்து வருவதாகவும்-

நோர்வேயின் பங்களிப்பு, விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தம் ஆகியவற்றை ஜப்பான் வரவேற்பதாகவும்-

ஜப்பானியத் தூதர் தமிழ்க் கட்சியின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

(ஐ-3)

## சந்திரிகாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் போரிட்டு வருகின்றோம் என்பதை அவர்கள் நன்குணர்ந்துள்ளனர். எமது போர்ப்பலத்தின் எதிரே எதிரி சற்றுத் தள்ளாடிப் போயுள்ளதாகத் தென்படுகிறது.

"இதேவேளை எமது தீரம்மிக்க போர் வீரர்களையும் நாம் மறந்து விட முடியாது. சுமார் ஒருவருடத்துக்கு முன்னர் விடுதலைப் புலிகளின தாக்குதலின் முன்னே எமது பாதுகாப்புப்படை பாரதூரமான கஷ்டங்களுக்கும் பின்னடைவுகளுக்கும் முகம்கொடுக்க நேர்ந்ததென்பது உங்களுக்கு நன்கு நினைவில் இருக்கும்.

"அதேவேளை, எமது தீரம்மிக்க போர்வீரர்கள் இன்னுயிரைத் துச்சமென மதித்து மேற்கொண்ட போராட்டமும் அந்தப் போராட்டத்துக்கு இந்த நாட்டு மக்களிடமிருந்து கிடைத்த பாரிய ஒத்துழைப்பும் காரணமாக அவர்களால் யாழ்ப்பாணத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்தது.

"நாட்டை யுத்தச் சூழ்நிலையில் வைத்து செயற்பட்ட அந்த இடரார்ந்த காலப் பிரிவினுள் மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற பாரிய அன்பளிப்புகள் மற்றும் அவர்களின் பொறுமை மிகு ஒத்துழைப்பை நான் மீண்டும் நினைவு கூருகின்றேன்.

"இன்று படையினர் அடைந்துள்ள வெற்றியானது வடக்கு - கிழக்குப் பிரதேச தமிழ் மக்களை பாசிச கொடுங்கோலர்களிடமிருந்து மீட்டெடுக்கும் ஒரு வெற்றி போன்றதாகும். முழு நாட்டின் சுதந்திரத்தை நிலை நிறுத்தும் ஒரு வெற்றியாகும். தாயகத்தைக் காப்பாற்றுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் போர் வீரர்களுக்கும், உயிர் நீத்த போர் வீரர்களுக்கும் நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களை உற்சாகமூட்டும் "ரணவிரு பிரணாம" என்ற தேசிய அளவிலான நிகழ்ச்சித் திட்டத்துடன் நாமும ஒன்றிணைவோம்"-என்பனவாகும்.

(அ-7)

## ரூ.5 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத நிலையில் உள்ளனர். பட்டினி நிலையில் உள்ள மக்கள் தமது வாழ்க்கையைச் சீராக நடத்த அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கவேண்டும் என்று அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

(ஐ-3)




புதுக் கடைத் திறப்பு விழா அழைப்பு

நிகழும் விக்கிரம வருடம் தை மாதம் 25ஆம் திகதி இன்று (07.2.2001) புதன்கிழமை பகல் 9.66 மணிமுதல் 10.30 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

ஐங்கரன் வீடியோ விஷன்

திறப்பு விழா வைபவம் செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.39 ப.நோ.கூ.ஒழுங்கை,
39,ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு ,
திருநெல்வேலி.

இங்ஙனம்
கனகசிங்கம் முரளி
(கண்ணன்)
உரிமையாளர்



ஐங்கரன் வீடியோ விஷன்

(C/15174)

எமது புதிய பிரமிட் வீடியோ CD வெளியீடு

ராஜசேகர், பப்லு, மனோகரமா நடித்த
☆ தர்மவம்சம்

பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்.

15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/15199)

எமது ஒரிஜினல் FIVE STAR வீடியோ CD வெளியீடு

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
ராஜசேகரின்
☆ தர்மவம்சம்
பிரகாஷ்ராஜின்
☆ காதல்வெண்ணிலா

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்

(C/15202)

கைகொடுத்தல் நிதி

காணாமல் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களின் எதிர்கால வாழ்வுக்கு கைகொடுக்கும் திட்டம்.

இந் நிதி சேகரிப்புக்காக

உயிர் விசை
(நாடக ஆற்றுகை)

முகாமைத்துவ கற்கைகள்,வணிக பீட மாணவர் ஒன்றியம்.

இரவு பகல் சேவை
போட்டோ பிரதி சேவை
T.P.:- 070-212881
வதிரி வீதி, உடுப்பிட்டி.

JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA, SRILANKA

Regd. No.15251 T.P.3335

தொழிற் பயிற்சிகள்

* RADIO, T.V. AND VIDEO DECK REPAIRING

சகல இன றேடியோ, ரீ.வி., வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 9 மாதங்கள்)

* MOTOR REWINDING AND ELECTRICAL WIRING

சகல இன மோட்டார், (F) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப் படும். (காலம் 6 மாதங்கள்)

* MOTOR CYCLE MECHANISAM

சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 5 மாதங்கள்)

* AIR CONDITIONING AND REFRIGERATION

சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)

* CITY AND GUILDS OF LONDON EXAM
(1) POWER (2) ELECTRONICS

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:
09.02.2001 (கிழமை நாள்களில்)
10.02.2001 (சனி, ஞாயிறு நாள்களில்)

மேலதிக விவரங்களுக்கு நேரில்

52/1, Stanley Road, Jaffna
(றெயில்வே கடவை அருகில்)

No.7, Palaly Road, Jaffna.

-DIRECTOR

(C/15188)

சுப்பர்ஸோவின் வாடிக்கையாளருக்கு ஒரு நற்செய்தி

யாழ்.நகரில் முதல் முறையாக வீடியோ கசற்றிலிருந்து நேரடியாக CDயில் பதிவு செய்யும் "DATA VIDEO" என்னும் இலகு முறையில் பிரதியாக்கம் செய்யும் கருவி எம்மிடம் வந்துள்ளது.

(கொம்பியூட்டர் அல்லாத முறையில்)

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகள் யாவும், CD யில் பதிவு செய்து கொள்ளவும், ஓடியோ நிகழ்ச்சிகளையும் CD யில் பதிவு செய்து கொள்ளவும் மற்றும் அண்மையில் வெளிவந்த புதிய பக்திப்பாடல்களாகிய பிள்ளையார், முருகன், சிவன், அம்மன், பெருமாள் மற்றும் சமஸ்கிருத ஸ்லோகங்களும் இவற்றுடன் ஹரிகரனின் "COLONIAL COUSINS" மற்றும் லண்டன் மாநகரில் வெளியான பெருமாளின் "துளசி (THULASI)"ஆங்கிலப் பாடலும் எங்குமே இல்லாத எம்மிடம் மாத்திரமே உள்ள இப் பாடல்கள் அனைத்தையும் சிறந்த முறையில் பதிவு செய்து பெற்றிட

"சுப்பர்ஸோ வீடியோ ஓடியோ சென்ரர்"

149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.2082 (C/15196)


## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு மகேஸ்வரி

கல்லுவம், கரவெட்டியைச் சேர்ந்த மார்க்கண்டு மகேஸ்வரி (02.02.2001) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2001) புதன்கிழமை காலை 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லுவம்,
கரவெட்டி.

(83879)

தகவல்:-
மகன்மார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07. 02. 2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.